E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 ஜுன் 4 சனிக்கிழமை


# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 130 | Saturday 04, June, 2022 | 10பக்கங்கள்

## மின்சாரம், தொலை தொடர்பு கட்டணங்கள் அதிகரிப்பு



புதிய மின்சார திருத்தக் கட்டணம் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகியுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் வரி அதிகரிப்புக்கமைவாக இவ்வாறு மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதாக பொதுப்

06

# அத்தியாவசிய உணவுப் பொருட்களை போதுமானளவில் கையிருப்பை பேணவும்

## ஜனாதிபதி பணிப்புரை

- அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை முடிந்தவரை கட்டுப்படுத்த நடவடிக்கை...
- விவசாய அறுவடை கிராமப்புற சந்தையிலிருந்து அப்பகுதியில் உள்ள நுகர்வோருக்கும்...
- நியாயமற்ற விலையில் இடம்பெறும் வியாபாரம் தொடர்பில் தீவிர அவதானம் ...

பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் போதுமான அளவு கையிருப்பில் வைத்திருக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

பொருட்களுக்கு தட்டுப்பாடு இருப்பதாகக் காட்டி சில வர்த்தகர்கள் விலையை அதிகரிக்கச் செய்யும் திட்டமிட்ட முயற்சிகளை இதன் மூலம் தடுக்க முடியுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வணிகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகள் எதிர்நோக்கும் சவால்களுக்கு விரைவான தீர்வுகளை காண்பது தொடர்பான கலந்துரையாடல் (02) ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

06

மல்வானை சொத்து விவகார வழக்கு:

## பசில், திருக்குமார் நடேசன் குற்றமற்றவர்களென விடுதலை

கம்பஹா மேல் நீதிமன்றம் உத்தரவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மல்வானையில் சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவருடன் திருக்குமார் நடேசனும் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி வழக்கு நேற்றையதினம் கம்பஹா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி

06

## மாத இறுதியில் IMF உடனான பேச்சுவார்த்தைகள் நிறைவடையும்

பிரதமர் ரணில் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் இம்மாத இறுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிதி மற்றும் சட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒன்றிணைந்த வணிக சபை பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

இவ்வருடம் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன்களை மீள செலுத்துவதற்கு 5 பில்லியன் டொலர்களைப் பெற்றுக் கொள்வதே எமது இலக்காகும்.

06

## கொவிட் 19 நிதியத்தின் ரூ.1.8 பில்லியனை

# அத்தியாவசிய மருந்து வகைகள் கொள்வனவுக்கு பயன்படுத்தவும்

## ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்பு

சுகாதாரத்துறை உயரதிகாரிகளுக்கிடையே நடைபெற்ற விசேட சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு



தேசிய மருந்து உற்பத்தியை அதிகரித்து விரைவுபடுத்தவும் திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொவிட் 19 நிதியத்திலுள்ள 1.8 பில்லியன் ரூபாவை அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதாரத்துறையில் உடனடியாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் நேற்று ஜனாதிபதிக்கும் சுகாதாரத்துறை உயர் அதிகாரிகளுக்குமிடையில்நடைபெற்றவிசேட பேச்சுவார்த்தையின் போதே ஜனாதிபதி இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

06

## நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு

# நிலையான அரசியல் சூழ்நிலை அவசியம்

அதற்கு 21 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டியது கட்டாயம்



சிறு அரசியல் கட்சிகள், முஸ்லிம் சிவில் அமைப்புக்களுடனான நேற்றைய சந்திப்பில் நீதியமைச்சர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு ஸ்திரமான அரசியல் சூழ்நிலை அவசியமென தெரிவித்துள்ள நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, அதற்காக 21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டியது அவசியமென்றும் நேற்று தெரிவித்துள்ளார்.

உத்தேச 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாராளுமன்ற அங்கத்துவமற்ற சிறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவுக்குமிடையில் நேற்று விசேட சந்திப்பொன்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

06

## பாணந்துறையில் மரக்கறி வியாபாரி சுட்டுக்கொலை

பட்டப்பகலில் துணிகரம்

பாணந்துறையில் நேற்று (03) மதியம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பாணந்துறை உயன்கெலே நிர்மலா மாவத்தையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாத்துவ, தல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ரந்திக மதுஷான் (30) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாணந்துறையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இவர், நேற்று மதியம் 12.45 அளவில் சுட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். மற்றுமொரு நபருடன் காலி வீதிக்கு சென்று கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவருடன் சென்ற நபருக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் கீழே விழுந்து கிடந்த போதும் துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளை திருப்பிக் கொண்டு வந்து காயமடைந்தவர் மீது

06

மே 09 வன்முறைச் சம்பவங்கள்

## கஹந்தகமகே உள்ளிட்ட மூவருக்கு 08 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்பு



அலரிமாளிகை மற்றும் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்ட கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகமகே உள்ளிட்ட மூவரை எதிர்வரும் 08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது

06

வடக்கு, கிழக்கில் வன பாதுகாப்பு திணைக்களம்

## சுவீகரித்த வயல் காணிகளை விரைவில் விவசாயிகளுக்கு வழங்க திட்டம்

அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வன பாதுகாப்புத் திணைக்களத்துக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வயல் காணிகளை பயிர்ச் செய்கைகளுக்காக விரைவாக விவசாயிகளுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான பணிப்புரைகளை கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்துக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அடுத்த மாதம் முதல் யூரியா உரம் பத்தாயிரம் ரூபாவுக்கு விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்குமிடையில் விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளதுடன் அவர்களின் வேண்டுகோள்களையும் அமைச்சர் அதன்போது ஏற்றுக்கொண்டுள்ளார்.

06

## மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டுக்கு ஓரிரு தினங்களுக்குள் தீர்வு

சிபெட்கோ வட்டாரங்கள் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் தற்போது நிலவும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் ஓரிரு தினங்களில் நுகர்வோருக்கு மண்ணெண்ணெய்யை பெற்றுக்கொடுக்க முடியும் என பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் மூலம் உற்பத்தி

06



### முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் விநியோகம்

பிரதமருடன் விசேட கலந்துரையாடல் 03



### மூன்று மாதங்களில் கொழும்பில் உணவு தட்டுப்பாடு ஏற்படும்

தினமும் 350 மெ. தொன் உணவு வீணடிப்பு 03



### உணவு நெருக்கடிக்கு தீர்வு காண விசேட வேலைத்திட்டம்

அடுத்த மாதம் வெளியிடுவதாக பிரதமர் ரணில் தெரிவிப்பு 03

செவ்வாய்க்கிழமை வரையில்

## சமையல் எரிவாயு தேவைக்கு வரிசையில் நிற்க வேண்டாம்

இன்று கொழும்புக்கு மட்டும் விநியோகம்



சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இன்று மாத்திரமே விநியோகிக்கப்படுமென லிற்றோ நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு 01 முதல் கொழும்பு 15 வரை மாத்திரமே எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படுமென அவர் கூறியுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (ஜூன் 07) வரை நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மக்கள் சமையல் எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாமென லிற்றோ நிறுவனத்தின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று 10,000 எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படுவதுடன் நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை

06

## நீர்த்தாங்கிக்குள் பதுக்கி வைத்த சுமார் 3,000 லீற்றர் டீசல் மீட்பு

சந்தேக நபர் ஒருவரும் கைது



**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

அக்கரைப்பற்று, பட்டியடிப்பிட்டி பிரதேசத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3,000 லீற்றர் டீசல் அக்கரைப்பற்று பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை காரணமாக கைப்பற்றப்பட்டதுடன் தொடர்புடைய நபர் ஒருவர் கைது

06

## காணாமல் போன தாய் சடலமாக மீட்பு

மருதமுனையில் பெரும் சோகம்

மருதமுனையில் காணாமல் போன இரண்டு பிள்ளைகளின் தாய் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை – பெரியநீலாவணை மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 54 வயதுடைய எம்.ஆர். பஸீரா என்ற பெண் கடந்த இரண்டு தினங்களாக காணாமல் போயிருந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பிரதேச பள்ளிவாசல்களிலும் பொதுமக்கள் உதவி செய்யுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து, பிரதேச மக்களும் பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த

06

## லாஃப் Gas விநியோகம் நாளை முதல் ஆரம்பம்

3,000 மெ.தொன் கப்பல் வருகை




லாஃப் சமையல் எரிவாயு நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுக் கப்பல் இன்று (04) இலங்கைக்கு வரவுள்ளதாக லாஃப் நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கப்பலில் சுமார் 3,000 மெற்றிக் தொன் எரிவாயு இருப்பதாக அந்நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக லாஃப் எரிவாயு விநியோகம் செய்யப்படவில்லை. டொலர் நெருக்கடி காரணமாக நாட்டில்

06

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனின் 20 வீதமான நிலப்பகுதி ரஷ்யா வசம்



உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு 100 நாட்களை எட்டியிருக்கும் நிலையில் உக்ரைனின் 20 வீதமாக நிலப்பகுதியை ரஷ்யா கைப்பற்றி இருப்பதாக உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

லக்சன்பேர்க்கில் எம்.பிக்களிடம் பேசிய அவர், போரின் முன்னரங்கு பகுதி 1000 கி.மீ வரை நீண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

'இந்த ஆக்கிரமிப்பில் ரஷ்ய இராணுவ அமைப்பின் அனைத்து படைகளும் ஈடுபட்டுள்ளது' என்றும் வீடியோ தொழில்நுட்பம் வழியாக பேசிய செலென்ஸ்கி குறிப்பிட்டார்.

கிழக்கு டொன்பாஸ் பிராந்தியத்தில் செலரோடோனெஸ்க் நகர் மீது ரஷ்ய படைகள் தற்போது உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகிறது.

கிழக்கு உக்ரைனின் டொன்பாஸ் பிராந்தியத்தில் ஏற்கனவே தங்களது ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகள் போக, எஞ்சியுள்ள பகுதிகளை அரசுப் படையினரிடமிருந்து கைப்பற்றுவதற்கான நடவடிக்கையில் ரஷ்யா தற்போது தீவிரம் காட்டி வருகிறது.

அத்துடன், கிளர்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் தங்களது கட்டுப்பாட்டில் இருக்கும் தெற்கு உக்ரைனின் கிரீமியா தீபகற்பத்துக்கும் இடையே தரைவழி இணைப்பை ஏற்படுத்துவதற்காக, இடைப்பட்ட நிலப்பிரதேசங்களைக் கைப்பற்றும் முயற்சியிலும் ரஷ்யா ஈடுபட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக, டொன்பாஸுக்கும் கிரீமியாவுக்கும் இடையிலுள்ள முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரான மரியுபோலை ரஷ்யப் படை கைப்பற்றியுள்ளது.

மேலும், கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க் பகுதியில் அமைந்துள்ள லிமான் நகரும் ரஷ்யாவிடம் கடந்த மாத இறுதியில் வீழ்ந்தது. அத்துடன், லூஹான்ஸ் பிரதேசத்தின் கடைசி முக்கிய பெரிய நகரான சியெவெரோடொனட்ஸ்க்கின் 80 வீதப் பகுதி ரஷ்யப் படையின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

இந்த நிலையில், ஏற்கனவே கடந்த 2014ஆம் ஆண்டு ரஷ்யாவால் இணைத்துக்கொள்ளப்பட்ட கிரீமியா தீபகற்பம், ரஷ்ய ஆதரவுப் படையினரால் கைப்பற்றப்பட்ட டொன்பாஸ் பகுதிகளையும் சேர்த்து, தற்போது 20 வீத உக்ரைன் பிரதேசங்கள் ரஷ்யா வசம் வந்துள்ளதாக ஜனாதிபதி செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்த போரினால் 9 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். ஆறரை மில்லியன் பேர் உக்ரைனிலிருந்து வெளியேறி விட்டனர். அந்நாட்டின் மக்கள் தொகையில் அது பத்து வீதத்திற்கும் மேலாகும்.

## எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க ஒபெக் முடிவு




சர்வதேச அளவில் மசகு எண்ணெய் விலை அதிகரித்து வருவதால், அதைக் கட்டுப்படுத்தும் விதமாக அதன் உற்பத்தியை அதிகரிக்க ஒபெக் ப்ளஸ் கூட்டமைப்பு நாடுகள் முடிவு செய்துள்ளன.

இந்தக் கூட்டமைப்பில், மசகு எண்ணெய் மற்றும் பெற்றொலியப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் 13 நாடுகளும், ரஷ்யா உள்ளிட்ட இதர நாடுகளும் இடம்பெற்றுள்ளன.

ஒபெக் ப்ளஸ் கூட்டமைப்பின் கூட்டம், லண்டனில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதில், கொரோனா பெருந்தொற்று காலத்தில் குறைக்கப்பட்ட மசகு எண்ணெய் உற்பத்தியை மீண்டும் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது.

கடந்த 2020இல் கொரோனா பொதுமுடக்க காலத்தில் பெற்றோலியப் பொருள்களின் தேவை குறைவாக இருந்ததால் எண்ணெய் உற்பத்தி குறைக்கப்பட்டிருந்தது.

தற்போது மசகு எண்ணெய் தேவை அதிகரித்துள்ளதால், பெற்றோலிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. குறிப்பாக, அமெரிக்காவில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 116.3 டொலராக அதிகரித்துள்ளது.

பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரிப்பது, சர்வதேச பொருளாதார வளர்ச்சியை பாதிக்கச் செய்யும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, மசகு எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு ஒபெக் ப்ளஸ் கூட்டமைப்பு நாடுகள் முடிவு செய்துள்ளன.

வரும் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் நாளொன்றுக்கு 6,48,000 பீப்பாய் மசகு எண்ணெய்யை உற்பத்தி செய்ய அந்த நாடுகள் முடிவு செய்துள்ளன.

## துருக்கி நாட்டின் பெயரில் மாற்றம்



துருக்கி இப்போதிலிருந்து தன்னைத் 'துருக்கியே' என்ற பெயரில் அழைக்கும்படி ஐக்கிய நாடுகள் சபையிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

எல்லா மொழிகளிலும் 'துருக்கியே' என்று இனி அழைக்கும்படி குறிப்பிட்டது, அந்த மாற்றம் உடனடியாக நடப்புக்கு வரும் என்றது.

அங்காரா இது பற்றிய அதிகாரபூர்வ கோரிக்கையை முன்வைத்திருப்பதாக ஐ.நா பேச்சாளர் ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாகவே, துருக்கி அது தயாரிக்கும் பொருட்களில் "துருக்கியே தயாரிப்பு" என்பதைப் பயன்படுத்தி வருகிறது.

இதன் மூலம் துருக்கிஎன்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் வான்கோழிக்கும், நாட்டின் பெயருக்கும் வேறுபாடு தெரியும் என்றும் கூறப்பட்டது. பெயர் மாற்றம் வேடிக்கையாக இருக்கலாம்.

ஆனால் நாட்டில் பல ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருக்கும் ரிசெப் தயீப் எர்துவான், நாட்டின் மரியாதையை சர்வதேச அரங்கில் பாதுகாப்பதற்கு எடுக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்று என்று அந்நாட்டு நிபுணர் ஒருவர் தி நியுயோர்க் டைம்ஸ் இடம் கூறினார்.

உஸ்மானி பேரரசில் இருந்து துருக்கி சுதந்திரம் பெற்ற நூறு ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளன. அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலும் நடைபெறவுள்ளது.

பெயர் மாற்றம், அதை ஒட்டி கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் பார்க்கப்படுகிறது.

நாடுகள் தமது பெயரை மாற்றுவது அரிதான ஒன்றல்ல. 2020இல் நெதர்லாந்து தமது நாட்டை ஒல்லாந்து என்று அழைப்பதை கைவிட்டது. அதற்கு முன்னர் கிரேக்கத்துடனான பிரச்சினை காரணமாக மசிடோனியா தனது நாட்டின் பெயரை வடக்கு மசிடோனியா என்று மாற்றியது. ஆபிரிக்க நாடான சுவாசிலாந்து தனது பெயரை 2018இல் எஸ்வாட்டினி என்று மாற்றியது.

வரலாற்றில் மேலும் பின்னொக்கிச் சென்றால் ஈரான் தனது பாரசீகம் என்ற பெயரை மாற்றிக் கொண்டது. சியாம் என்ற பெயரே தற்போது தாய்லாந்து என்று மாற்றப்பட்டிருப்பதோடு முன்னர் ரொடேசியா என்ற நாடே தற்போது சிம்பாப்வே என மாறியுள்ளது.

## குரங்கம்மை அச்சம்: நைஜீரியாவில் காட்டு விலங்கு இறைச்சிக்குத் தடை



குரங்கம்மை நோய் பரவுவதை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காட்டு விலங்குகளின் இறைச்சிக்கு நைஜீரிய அரசு தடை விதித்துள்ளது.

நைஜீரியாவில் இந்த மாதத்தில் ஆறு குரங்கம்மை நோய் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டில் 21 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தொற்று இருக்கும் விலங்குகளை உண்பதால் நோய் பரவ வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இது பொதுவாக நோய் பரவும் வழியல்ல.

குரங்கம்மை மிதமான வைரஸ் தொற்று என்பதோடு நைஜீரியாவில் அது ஓர் பிராந்திய நோயாகவே உள்ளது. இது வெப்பமண்டல காடுகளுக்கு அருகில் இருக்கும் தொலைதூர பகுதிகளிலேயே ஏற்படுகிறது.

ஆபிரிக்க பிராந்தியத்தின் நோயாக இருக்கும் குரங்கம்மை ஐரோப்பாவில் அண்மையில் அதிகரித்து வருவதற்கான காரணத்தை கண்டறிவதில் விஞ்ஞானிகள் போராடி வருகின்றனர். எனினும் இது ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு பரவுவதாகக் கூறப்படுகிறது.

நோய் தொற்று இருக்கும் ஒருவருடன் நெருங்கி பழகுவதால் இந்த வைரஸ் பரவக் கூடும். தோலில் இருக்கும் காயங்கள், சுவாசக்குழாய் அல்லது கண்கள், மூக்கு அல்லது வாய் வழியாக இந்த வைரஸ் உடலுக்குள் ஊடுருவ முடியும்.

இந்நிலையில் காட்டு விலங்குகளின் இறைச்சி நைஜீரிய தொலைதூர பகுதிகளில் வாழும் மக்களின் பிரதான உணவு மூலமாக இருக்கும் நிலையில் இந்தத் தடையை அரசு எவ்வாறு கையாளும் என்பது தெளிவில்லாமல் உள்ளது. நைஜீரியாவில் பல காட்டு விலங்கு இறைச்சி சந்தைகள் உள்ளன.

## பலூச் மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டம்



கடந்த மே 11 ஆம் திகதி காணாமல்போன பெரோஸ் பலூச்சை பாதுகாப்பாக மீட்பது மற்றும் பொய்யான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறும் ஹாபீஸ் பலூச்சை விடுதலை செய்யக் கோரி பாகிஸ்தானின் பலூச் மாணவர் சங்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் 'பலூச் மாணவர்கள் பலிவாங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று நாம் கோருகிறோம்' என்ற பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தி இருக்கும் புகைப்படத்தை அந்த சங்கம் ட்விட்டரில் வெளியிட்டுள்ளது.

காணாமல் செய்யப்படுவது உட்பட பாகிஸ்தானில் இடம்பெறும் உரிமை மீறல்கள் பற்றி உரிமைக் குழுக்கள் கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் சென்ற பாக். ஊடகவியலாளர் நீக்கம்



இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் ஊடகவியலாளர் ஒருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று அந்நாட்டு தகவல் துறை அமைச்சர் மரியும் அவ்ரங்கசிப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிய அமெரிக்கர்களுடன் சேர்ந்து அஹமது குரைஷி என்ற அந்த ஊடகவியலாளர் தனிப்பட்ட முறையிலேயே இஸ்ரேலுக்கு சென்றுள்ளார். இதில் பாகிஸ்தான் அரசு அல்லது அதன் கொள்கையில் சம்பந்தம் இல்லை என்பதையும் அவ்ரங்கசிப் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை கொண்டிராத ஒருசில தெற்காசிய நாடுகளில் ஒன்றாக பாகிஸ்தான் உள்ளது.

## அமெரிக்காவில் மற்றொரு துப்பாக்கிச் சூடு: மூவர் பலி



அமெரிக்காவின் அயோவா மாநிலத்தில், தேவாலயத்திற்கு வெளியே நடந்த துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கிதாரி என்று சந்தேகிக்கப்படும் ஆடவரும் அவர்களில் அடங்குவார்.

துப்பாக்கி வன்முறை குறித்து ஜனாதிபதி ஜோபைடன் நாட்டு மக்களிடம் உரையாற்றிய சிறிது நேரத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. சம்பவத்திற்கு முன்னர், தேவாலயத்தில் கல்லூரி மாணவர்களுக்கான பிரார்த்தனைக் கூட்டம் இடம்பெறவிருந்தது.

அண்மை நாட்களில் அமெரிக்காவைத்தொடர்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் உலுக்கிவருகின்றன.

துப்பாக்கிகளை வாங்கும் வயது வரம்பை 18 லிருந்து 21க்கு உயர்த்துவது உள்ளிட்ட கட்டுப்பாடுகளை கொண்டுவர பைடன் வலியுறுத்தியுள்ளார்.

## சீன போர் விமானங்களின் தொந்தரவு: கனடா கவலை



சீனப் போர் விமானங்கள் கனடிய ரோந்து விமானங்களை தொந்தரவு செய்யும் தகவல்கள் மிகவும் கவலை அளிப்பதாக கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியுள்ளார்.

அதை மிகவும் தீவிரமாக கருத்தில் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதுபோன்ற சம்பவங்கள் இனி இன்னும் பெரிய அளவில் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்ய, சீன அதிகாரிகளிடம் நேரடியாகப் பேசவிருப்பதாக ட்ரூடோ கூறினார்.

சீன விமானப் படை விமானிகள் அண்மையில் சர்வதேச ஆகாய வெளியில் நிபுணத்துவமற்ற வகையில், ஆபத்தான முறையில் நடந்து கொண்டதாக கனடிய இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும் அவை சிலவேளைகளில் சர்வதேச வான் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு நடக்கவில்லை என்றும் அதுகூறியது.

சில சமயங்களில் ஊடுருவும் சீன விமானப் படை விமானங்களை மோதிவிடாமல் தவிர்க்க, கனடியப் படை, விமானப் பாதையை மாற்றிக் கொள்ளும் நிலை ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

## பலஸ்தீனக் கொடியை நீக்குவதற்கு இஸ்ரேலிய பாராளுமன்றில் ஆதரவு



அரச நிதியில் இயங்கும் நிறுவனங்களில் பலஸ்தீன கொடி உட்பட எதிரிகளின் கொடிகளை பறக்கவிடுவதை தடை செய்யும் சர்ச்சைக்குரிய சட்டமூலம் ஒன்றுக்கு இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் ஆதரவாக வாக்களிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் தொடர்பான ஆரம்ப வாசிப்பில் பாராளுமன்றத்தில் ஆதரவாக 63 வாக்குகளும் எதிராக 16 வாக்குகளும் கிடைத்தன. எனினும் இது சட்டமாக அங்கீகரிப்பதற்கு மேலும் வாக்கெடுப்புகள் இடம்பெறவுள்ளன.

எனினும் இந்த கொடிகள் மீதான கோபம் இஸ்ரேலில் ஏற்கனவே உச்சத்தை பெற்றுள்ளது. டெல் அவிவுக்கு சற்று வெளியில் இருக்கும் பலஸ்தீன கொடியை காண்பிக்கும் இராட்சத பதாகை ஒன்று கடந்த புதன்கிழமை அகற்றப்பட்டுள்ளது. ஆனால் அங்கு இருந்த இஸ்ரேலிய கொடி மாத்திரமே வைக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீன கொடிகளுக்கு எதிரான இஸ்ரேலிய இராணுவத்தின் அண்மைய நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகர் ஒன்றில் பலஸ்தீன கொடிகளை அகற்றும் யூதக் குடியேற்ற வாசிகளுக்கும் இஸ்ரேலிய படையினர் பாதுகாப்பு அளித்தமை குறிப்பிடத்தக்கது.

'எதிரி நாடுகளின் கொடிகள் அல்லது பலஸ்தீன அதிகாரசபை கொடியை பறக்கவிடுவதை' தடை செய்யும் இந்த சட்டமூலம் வலதுசாரி எதிர்க்கட்சியான லிகுட் கட்சியின் எல் கொஹனினால் கொண்டுவரப்பட்டது.

'பலஸ்தீனர் என்று தம்மை கருதும் யாரேனும் இருந்தால் அவர்கள் ஒரு வழிப் பயணமாக காசாவுக்குச் செல்ல தேவையான அனைத்து உதவிகளும் எம்மிடம் இருந்து கிடைக்கப்பெறும்' என்று அவர் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜூன் 4 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
01 முதல் 06 வரை
சுபஹ் - 04.32
ளுஹர் - 12.10
அஸர் - 03.36
மஃரிப் - 06.24
இஷா - 07.40

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் வைகாசி 21
ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தமரண யோகம்
திதி: பஞ்சமி






புதிய பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில்(02) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார். பின்னர், புதிய இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் விக்கும் லியனகேயும் ஜனாதிபதியை சந்தித்தார். உரிய பதவிகளில் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அவர்களை முப்படைகளின் தலைவரான ஜனாதிபதியைச் சந்திப்பது சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.

# உணவு நெருக்கடிக்கு தீர்வு காண விசேட வேலைத்திட்டம்

## அடுத்த மாதம் வெளியிடுவதாக பிரதமர் ரணில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு எதிர்கொள்ள நேரும் உணவு நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் விசேட திட்டமொன்றை அடுத்த மாதம் வெளியிடப்போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதிகளுக்கும் பிரதமருக்குமிடையில் நேற்று கொழும்பில் நடைபெற்றுள்ள உத்தியோக பூர்வ சந்திப்பின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் உரம் மற்றும் எரிபொருள் பிரச்சனைகளுக்கு தீர்வு காண விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 06 மாதங்களுக்குள் தற்போதைய உணவு பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

பிரதமருடனான நேற்றைய (03) சந்திப்பில் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி விமலேந்திர ஷரன் மற்றும் ஐக்கிய நாடுகள்



அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதி மலின் ஹெர்விக் இருவரும் பங்கேற்றுள்ளனர்.

இச் சந்திப்பில் நாட்டின் தற்போதைய உணவு பற்றாக்குறை தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன்போது மேற்படி பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ள பிரதமர்,

விவசாயத்துறையானது தற்போது உரம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டையே எதிர்நோக்கியுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரும் உணவு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் தன்னால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நகர்பிரதேச விவசாய வேலைத் திட்டம் தொடர்பிலும் பிரதமர் இதன்போது தெளிவுபடுத்தியுள்ளார்.

உணவுப் பற்றாக்குறை அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு, வேளாண்மைத் துறை அதிகாரிகளால் உணவுப் பாதுகாப்புத் திட்டம் தொகுக்கப்பட்டு வருவதாக பிரதமர் விளக்கினார். இந்த திட்டம் அடுத்த மாதம் வெளியிடப்பட உள்ளது, UNDP இந்த முயற்சிக்கு ஆதரவை வழங்குமென இதன்போது தெரிவிக்கப்பட்டது. சாத்தியமான உணவுப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு முன்னெடுக்கப்படும் நகர்ப்புற விவசாய உற்பத்தி முயற்சியையும் பிரதமர் விரிவாக தெளிவுபடுத்தினார்.

உரத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க விவசாய சமூகத்துக்கு உதவும் புதுமையான விவசாய உதவித் திட்டத்தைத் தொகுத்து வருவதாக UNDP இதன்போது விளக்கமளித்தது.

நன்கொடையாளர்கள் நாட்டுக்கு உதவ முன்வந்துள்ளனர் என்பதையும் நகர்ப்புற விவசாயத் திட்டம், மேலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டால் அதிக நிதியுதவி வழங்கப்படும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் அமுல்படுத்தப்படக்கூடிய உணவு நெருக்கடிக்கான பதில் திட்டத்தை தாங்கள் உருவாக்கி வருவதாகவும்

06

# முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் விநியோகம்

## பிரதமருடன் விசேட கலந்துரையாடல்



முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் விநியோகத்தை எதிர்காலத்தில் பிரச்சினை ஏற்படாத வகையில் பேணுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முச்சக்கர வண்டிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று பிற்பகல் நடைபெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்தும் அமைப்பொன்றை நிறுவுவதற்கு ஆதரவளிக்க பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

நாட்டுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம் 500 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாக பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

06



நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ இலங்கையிலுள்ள நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அபல்டனை (Michael Appleton) நேற்று முன்தினம் அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தபோது நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை மற்றும் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் அமைச்சர் விளக்கமளித்தார்.

# எவோட்ஸ் 2022 க்கான கட்டுரை போட்டி முடிவுகள்

புதிய அலை கலை வட்டம் நாடளாவிய ரீதியில் வருடாந்தம் நடத்தி வரும் எவோட்ஸ் 2022 கலை,கலாசாரப் போட்டித் தொடருக்கான கட்டுரை போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் வவுனியாவை சேர்ந்த ராசேல் சிந்தியா முதலாமிடத்தையும் மருதமுனையைச் சேர்ந்த எம். ஆர்.காமில் பயலஸ்

06

# ஒடுக்கப்படும் தமிழ் கட்சிகளை நட்புடன் அரவணையுங்கள்

## போராட்டக்கள அனைத்து கட்சி போராளிகள் குழுவிடம் மனோ கணேசன் எம்.பி தெரிவிப்பு

" இந்நாட்டில் ஜனாதிபதியாவதற்கோ பிரதமராவதற்கோ நாம் துடிதுடிக்கவில்லை. எம்மை போன்ற ஒடுக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் முற்போக்கு கட்சிகளை வேறு விதமாக பாருங்கள். இந்நாட்டில் நாம் பேரினவாதத்தால் ஒடுக்கப்பட்டுள்ள எமது மக்களை விடுவிக்கவே இன்று நாம் துடிக்கிறோம் " என தமிழ் முற்போக்கு கூட்டணியை சந்தித்த போராட்டக்கள அனைத்து கட்சி போராளிகள் குழுவிடம் மனோ கணேசன் எம்பி தெரிவித்தார்.



தமிழ் முற்போக்கு கூட்டணி அனைத்து கட்சி போராளிகள் குழு சந்திப்பு, நேற்று கூட்டணி தலைவர் மனோ கணேசன் இல்லத்தில் நிகழ்ந்தது. தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர் பழனி திகாம்பரமும் இச்சந்திப்பில் கலந்துக்கொண்டார்.

06

# 3 மாதங்களில் கொழும்பில் உணவு தட்டுப்பாடு ஏற்படும்

## தினமும் 350 மெ. தொன் உணவு வீணடிப்பு

கொழும்பு நகரில் இன்னும் மூன்று மாதங்களில் உணவுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்க எச்சரித்துள்ளார்.



உணவு கையிருப்பு செப்டம்பர் மாதம் வரை மட்டுமே இருக்கும் என எச்சரிக்கை விடுத்த மேயர் ரோசி சேனாநாயக்க, கொழும்பு மாநகர சபை (CMC) விரைவில் நகருக்குள் 600 ஏக்கர் நிலத்தில் அத்தியாவசிய உணவுப் பயிர்களை பயிரிடத் தொடங்கும் என்று தெரிவித்தார்.

நகரத்தில் வசிப்பவர்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் அத்தியாவசிய உணவுப் பயிர்களை வளர்க்க ஊக்குவிக்கப்படும் அதே வேளையில் பயிர்களை வளர்ப்பதற்கான விவசாயத் திட்டத்தைத் தொடங்க கொழும்பு மாநகர சபை திட்டமிட்டுள்ளதாகவும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

“கொழும்பு நகர சனத்தொகையில் குறைந்த வருமானம் பெறும் சுமார் 60 வீதமானவர்கள் உணவுப் பற்றாக்குறையினால் பாதிக்கப்படுவார்கள். நான் யாரையும் அச்சுறுத்த விரும்பவில்லை, ஆனால் வரவிருக்கும் நெருக்கடியை மக்களுக்கு தெரிவிக்கவும், மக்களை தயார்படுத்தவும் விரும்புகிறேன்” என்று அவர் கூறினார்.

இந்நிலையில், கொழும்பு நகரில் குறைந்த

06

# நாடளாவிய ரீதியில் விவசாய புரட்சிக்கு சஜித் அழைப்பு



நாடு தழுவிய ரீதியிலான விவசாயப் புரட்சியொன்றை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக அதன் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச அறிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்படவுள்ள உணவுப் பஞ்சத்தில் இருந்து நாட்டு மக்களைக் காப்பாற்றும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பசளை தட்டுப்பாட்டுக்கு மாற்று வழிகளைக் கண்டறிதல், உள்நாட்டு பயிர்ச் செய்கை முறைகளை பிரபல்யப்படுத்துதல், உள்நாட்டு உணவுப் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம் அளித்தல்போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இதற்கான நிதியுதவிகள் மற்றும் ஏனைய ஒத்தாசைகளை கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் தன்னார்வ அடிப்படையில் வர்த்தக ர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி கட்சி எதிர்பார்த்துள்ளது.

கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் கிராமிய ஆதரவாளர்களை இணைத்துக் கொண்டு இந்த திட்டத்தை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தீர்மானித்துள்ளது.





லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளராக ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் பணிப்பாளர்களாக சிசிற பரணதந்ரி மற்றும் பிரபாத் மஞ்சுள மாகும்புரவும் நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்று லேக் ஹவுஸ் நிறுவனத்தில் உத்தியோகபூர்வமாக தங்களது கடமைகளை அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டபோது...
(படங்கள்: சுதத் மலவீர, ஹிரந்த குணதிலக்க)

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 255.52 | 266.96 |
| கனடியன் டொலர் | 280.59 | 291.86 |
| யூரோ | 383.09 | 393.95 |
| ஜப்பான் யென் | 2.7258 | 2.8339 |
| சிங்கப்பூர் டொலர் | 258.78 | 267.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 445.19 | 460.70 |
| சுவிஸ் பிராங்க் | 369.45 | 383.41 |
| அமெரிக்க டொலர் | 355.31 | 365.28 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 955.66 | கட்டார் ரியால் | 98.64 |
| குவைத் டினார் | 1,177.52 | சவூதி ரியால் | 96.05 |
| ஓமான் ரியால் | 935.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.09 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 21ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 03

### குறள் தரும் சிந்தனை



இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்

இன்பம் வரும் பொழுது அதற்காக ஆட்டம் போடாதவர்கள், துன்பம் வரும் பொழுதும் அதற்காக வாட்டம் கொள்ள மாட்டார்கள். இரண்டையும் ஒன்றுபோல் கருதும் உறுதிக்கு இது எடுத்துக்காட்டு.

## அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதன் மூலமே பொருளாதார சிக்கலுக்கு முடிவு!

இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்காமல், நாட்டின் எந்தவொரு நெருக்கடிக்கும் தீர்வைக் கண்டுவிட முடியாதென்பதே பொதுவான கருத்தாக இருக்கின்றது. நாட்டில் கீழ்மட்டத்தில் வாழ்கின்ற மக்கள் தொடக்கம், கற்றறிந்த மக்கள் வரை அனைவரும் இதே கருத்தையே கொண்டுள்ளனர். அவர்கள் இக்கருத்தை வெளிப்படையாகவே பேசுகின்றனர்.

இதனை சுருங்கக் கூறுவதாயின், இலங்கையின் அரசியல் முறைமை தொடர்பாக மக்கள் பலருக்கு உடன்பாடு கிடையாது என்பதே அர்த்தம். அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்களின் செயற்பாடுகளிலும் மக்கள் மத்தியில் திருப்தி நிலவவில்லை. அரசியல்வாதிகளின் மனோபாவம் மாத்திரமன்றி, அரசியலமைப்பு முறைமையும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தையே எமது மக்கள் நீண்ட காலமாகக் கொண்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு ஆங்காங்கே மேற்கொள்ளப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களும், நாட்டின் அரசியல் தொடர்பான சலிப்பின் வெளிப்பாடுகளேயாகுமென்பதில் உண்மை இல்லாமலில்லை. எமது அரசியல் முறைமையில் மக்கள் சலிப்பும், வெறுப்பும் கொண்டிருக்கின்றனர் என்பதே இதன் அர்த்தம்.

நாட்டு மக்களின் இவ்வாறானதொரு மனோநிலைக்கு மத்தியிலேயே 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நோக்கிய நகர்வுகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதாவது பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பதன் ஊடாக நாட்டின் பிரதானமான பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முற்பட வேண்டுமென்பதுதான் இதன் கருத்தாகும்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பாக பெரும்பாலான அரசியல் கட்சிகளிடமிருந்து சாதகமான சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை அதிகரிப்பதன் மூலம், அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியுமென்பதே பொதுவான நம்பிக்கையாக இருக்கின்றது.

எது நன்றாக இருக்கின்றதோ, எது சாத்தியப்பாடானதாக இருக்கின்றதோ அதனை நோக்கியே எமது நாடு செல்ல வேண்டுமென்பதுதான் மக்களின் விருப்பமாக இருக்கின்றது. அரசியல் பேதங்களோ, முரண்பாடுகளோ இங்கு பிரதானமல்ல. மக்களின் இன்றைய பிரதானமான நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதே முக்கியமான கோரிக்கையாக உள்ளது. எனவே அரசியல்வாதிகள் அனைவரும் மக்களின் கோரிக்கைகளைப் புரிந்து கொள்ளாதவரை இன்றைய பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்து விடப் போவதில்லை.

அரசியல் நெருக்கடியானது தீர்ந்தால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காண முடியும் என்கிறார்கள் அரசியலமைப்பு மற்றும் பொருளாதார நிபுணர்கள். அதாவது அரசியல் நெருக்கடியும், பொருளாதார நெருக்கடியும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதுதான் இதன் அர்த்தமாகும். எனவே பொருளாதார நெருக்கடி நிலவுகின்ற இவ்வேளையில் அரசியல் தரப்புகளுக்கிடையே முரண்பாடுகளும் போட்டாபோட்டிகளும் தொடருவது ஆரோக்கியமானதல்ல. ஆகவே 21 ஆவது அரசியல் திருத்தத்தின் ஊடாகவாவது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை நிலைபெற வேண்டுமென்பதுதான் நாட்டு மக்களில் பெருமளவானோரின் எண்ணமாக இருக்கின்றது.

அரசியல்வாதிகள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்களாக இருந்தால் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வது மிகக் கடினமான காரியமாக இருந்து விடப் போவதில்லை. மக்களினதும், எமது அரசியல்வாதிகளினதும் பொறுமையிலும், புரிந்துணர்விலும்தான் நாட்டின் சுபிட்சமே தங்கியுள்ளது என்பது தான் உண்மை.

நாட்டு மக்கள் இன்றைய காலத்தில் நிறையவே நொந்து போயிருக்கின்றார்கள். எமது தாய்நாடு தற்போது நெருக்கடியான காலப்பகுதிக்குள் பிரவேசித்துள்ளதென்பதை கற்றறிந்தவர்கள் மாத்திரமன்றி சாதாரண மக்களும் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர். இன்று எமது நாடு அனுபவிப்பது மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஆகும். இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் இவ்வாறான நெருக்கடியை முன்னர் ஒருபோதுமே சந்தித்ததில்லை என்பதை அறிய முடிகின்றது.

மக்கள் பயன்படுத்துகின்ற அன்றாட பாவனைப் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்து விட்டன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களாக மக்கள் அல்லல்படுகின்றனர். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற மக்கள் மாத்திரமின்றி நடுத்தர வர்க்க மக்களும் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செலுத்துவதற்கே தற்போது அல்லல்படுகின்றனர்.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பானது மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. வறிய மக்களின் துன்பங்கள் சொல்லும் தரமன்று. அத்துடன் சமையல் எரிவாயு மற்றும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களின் விலையுயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட கியூ வரிசையானது இன்னுமே முடிவுக்கு வந்தபாடாக இல்லை.

புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க, இன்றைய பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நம்பிக்கை தருகின்ற திட்டங்களை செயற்படுத்தி வருகின்றார். இவ்வேளையில் அரசியல் நெருக்கடிகளும் முடிவுக்கு வர வேண்டுமென்பதே மக்களின் வேண்டுகோளாகும்.

editor.tkn@lakehouse.lk

# காடுகளை அழிப்பதால் புவியில் உயிரினங்களின் எதிர்கால இருப்புக்கு உருவாகி வரும் பேராபத்து!

## உலக சுற்றாடல் தினம் நாளை அனுஷ்டிப்பு; சுற்றாடல் பாதுகாப்புக்கு நாம் ஒவ்வொருவரும் பங்காளிகளாவோம்!

ஐக்கிய நாடுகள் சபையானது ஒவ்வொரு வருடமும் புவிக்கோளையும் அதன் இயற்கையையும் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு வருடத்தின் ஜூன் 5 ஆம் திகதியை உலக சுற்றாடல் தினமாகப் பிரகடனப்படுத்தி அதை கொண்டாடி வருகின்றது. இத்தீர்மானம் கடந்த 1972 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டு 1974 ஆம் ஆண்டு முதன் முறையாக 'பூமி ஒன்று மட்டுமே' எனும் கருப் பொருளில் சுவீடனில் கொண்டாடப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கருப்பொருளுடன் ஒவ்வொரு நாடும் பிரதான நிகழ்வை பொறுப்பேற்று நடத்தி வருகிறது. 2022 ஆம் ஆண்டை சுவீடன் நாடு 'பூமி ஒன்று மட்டுமே' எனும் அதே கருப்பொருளில் நடத்துவதாக பிரகடனப் படுத்தி கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்வு உலகின் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் நடத்தப்பட்டு வருகிறது.

பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் நகரமயமாக்கல், வேளாண்மை, விவசாயம் போன்ற காரணங்களினாலும் அதிகரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களில் இருந்து வெளியாகும் பெருமளவான புகை, கழிவுகள் அனைத்தும் காற்று மண்டலத்திலும், நிலத்திலும், ஆறு, கடல்களிலும் கலந்து சுற்றுச் சூழலை பாதிப்படையச் செய்கின்றன. மேலும் மக்கள் உறைவிடங்கள் அமைப்பதற்காகவும் அவற்றுக்குரிய போக்குவரத்து பாதைகளை அமைப்பதற்காகவும் காடுகளை ஊடறுத்து செல்லக் கூடிய வீதிகள் அமைக்கப்படுவதனாலும் அருகாமையில் உள்ள காட்டு நிலப்பரப்புகள் அழிக்கப்படுகின்றன.



புகையினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை விஞ்ஞானிகள் அறிவுறுத்துவது ஒருபுறமிருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வரும் கடுமையான வெயிலின் தாக்கமும் திடீரென்று பெய்யும் கடும் மழையும் அதனால் விளையும் பெரு வெள்ளம் இயற்கையில் ஏதோ ஒழுங்கற்ற தன்மை உருவாகி வருவதை சூசகமாக உணர்த்துகின்றன.காடழிப்பு உலகம் முழுவதும் நடைபெற்று வருகின்றது. இதனால் உலகில் இன்று பலவிதமான காலநிலை மாற்றங்களும் சூழல் சுற்றாடல் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. காடுகளின் நன்மைகள், காடழிப்புக்குரிய காரணங்கள், காடழிப்பினைக் கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட வேண்டியவையாகும்.

உலக வெப்பமயமாதல் எனும் பிரச்சினையால் பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயர்வதால் சில நாடுகள் நீரில் மூழ்கும் அச்சுறுத்தல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நிலத்தடி நீர் பற்றாக்குறையால் தண்ணீர் பஞ்சமும் பல இடங்களில் ஏற்படவுள்ளது.

சுற்றுச்சூழலைக் காக்க இந்த உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் முன்வர வேண்டியது அவசியமானது. இந்த உலகில் மனிதன் மட்டும்தான் உள்ளானா? இல்லை விலங்குகளும் பறவைகளும் கூட வாழ்கின்றன. ஆனால் மனித இனத்தை தவிர வேறெந்த உயிரினத்தாலும் சுற்றுச்சூழலுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

**காடு வளர்த்தலின் நன்மைகள்:**

சூழல் மாசடைதலைத் தடுத்தல், காபனீரொட்சைட்டின் அளவைக் குறைத்தல், ஒட்சிசனின் அளவை அதிகரித்தலில் காடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. தாவரங்கள் ஒளித்தொகுப்பு நடவடிக்கைக்காக காபனீரொட்சைட்டை எடுத்து ஒக்சிஜனை வெளிவிடுகின்றன. இதனால் வளிமண்டலத்தில் பல்வேறு வீதங்களில் வெளியேறும் காபனீரொட்சைட்டு உறிஞ்சிக் கொள்ளக் கூடிய விதத்தில் செயற்கை மரங்கள் உருவாக்கப்படுகின்றன. இம்மரங்கள் இயற்கையான தாவரங்கள் போன்று உயிர்க்கலங்களை கொண்டிருக்கா விட்டாலும் மரங்களின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டே தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மழையை பெறத் துணை செய்தல்:**

ஆவியுயிர்ப்பு தொழிற்பாட்டின் மூலம் வளிமண்டலத்தில் நீராவியின் செறிவை அதிகரிக்கச் செய்வதுடன் உயர்ந்த காடுகள் காற்றுகளைத் தடுத்து மழைவீழ்ச்சியைக் கொடுக்கின்றன. அண்மையில் இலங்கையின் நடைபெற்ற மாநாட்டில் மழைவீழ்ச்சி குறைவடைந்தமைக்கு காடுகள் பயிர்ச்செய்கைக்காக அழிக்கப்பட்டமையும் ஒரு காரணமாக கருதப்பட்டு உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற பகுதிகளில் காடுகளை வளர்ப்பதுடன் பயிர்ச் செய்கைக்கு வடக்கு, கிழக்கிலுள்ள காடுகள் செறிவற்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற கருத்தும் கூறப்பட்டது.

காடுகள் எரிபொருளாக பயன்படல், தளபாடங்களுக்குரிய மூலப்பொருளாக பயன்படல், மருந்துகளாக பயன் படல் மற்றும் உணவுகளை வழங்கல் என பல்வேறு பயன்பாடுகள் உடையதாக காணப்படுகின்றன. பெரும்பாலான வளர்முக நாடுகளில் எரிபொருளாக விறகே பயன்படுத்தப்படுகின்றது. வீடுகளுக்குரிய கதவுகள், கூரைகள், தளபாடங்கள் செய்வதற்கும் மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் அரிய பல மருந்து வகைகளையும் காடுகளே கொண்டுள்ளன. உதாரணமாக ஆயுர்வேத வைத்தியத் துறைக்குத் தேவையான மருந்துகளை தன்னகத்தே சேமித்து வைத்துள்ள தாவர பட்டைகள், இலைகள், விதைகள் போன்றன இன்று ஆயுர்வேத வைத்தியத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

**உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாத்தல்:**

தாவரப் போர்வை மிக்க பிரதேசங்கள் உயிரினப் பல்வகைமை அதிகளவில் கொண்டனவாக காணப்படுகின்றன. மிருகங்கள் முதல் ஊர்வன வரை ஒரு காட்டு சூழல் தொகுதியில் இனங்காண கூடியனவாக உள்ளன. விலங்குகள் பறவைகளின் புகலிடங்களாக காடுகள் காணப்படுகின்றன. பூமியில் நிலப்பரப்பில் மழைக் காடுகள் 7 சதவீதம் மாத்திரமே உள்ள போதிலும் உலகில் வாழும் உயிரினங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை காடுகளிலேயே காணப்படுகின்றன.



காடுகளினால் மண்ணரிப்பு, வரட்சி, மண்சரிவு போன்றவை குறைவடைகின்றன. தாவரங்கள் நிலத்திற்கு போர்வையாக அமைகின்றமையால் பெருமளவில் நீர் ஆவியாவதை தடுப்பதுடன் மண்ணின் ஈரத்தன்மையையும் பாதுகாக்கின்றது.

காடுகள் காணப்படுகின்ற பகுதிகளில் மழை நீரானது பெருமளவில் கழுவு நீராட்டமாக செல்வதனை பாதுகாத்து தரைக்கு கீழே பொசிவுநீராக செல்வதற்கு தாவரங்கள் துணைபுரிகின்றன. இதனால் தரைக் கீழ் நீர்வளம் பாதுகாக்கப்படுகின்றது. பெரும்பாலான நதிக் கரையோரங்களில் மதுர போன்ற தாவரங்கள் காணப்படுவதனால் அவை வெள்ளப்பெருக்கை கட்டுப் படுத்தி வெள்ளப்பெருக்கு அணைகள் போன்று தொழிற்படுகின்றன.

காடுகள் ஒரு பிரதேசத்தின் இயற்கை அழகு மூலங்களாக காணப்படுகின்றன. பச்சைப் பசேலென காட்சியளிக்கும் காடுகள் கண்ணுக்கு குளிர்ச்சியையும், பிரதேசத்துக்கு அழகையும் கொடுக்கிறது. மரத்தின் இலைகள், தொங்குகின்ற பழங்கள், அழகான பூக்கள் எல்லாம் இயற்கை அழகை பார்ப்பவர்களுக்கு வழங்குகின்றன. கட்டடங்களாலே நிரம்பி வழிகின்ற நகர மக்கள் காடுகளின் அழகை பார்த்து ரசிக்கின்றனர். இதனால் நாட்டின் சுற்றுலாத்துறையும் வளர்ச்சியடைகின்றது.

காடுகளை அழிப்பதால் காபனீரொக்சைட் வளிமண்டலத்தில் அதிக அளவில் சேருகின்றது. இதனால் பல்வேறு தீங்குகள் ஏற்படுகின்றன. அதிக மழை அல்லது வரட்சியால் பயிர் விளைச்சல் பாதிக்கப்படும். குளிர் பிரதேசங்களில் பயிர்களின் வளர்ச்சிப் பருவம் அதிகரிக்கின்றது. பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. காபனீரொக்சைட் வாயு அதிகரிப்பதால் உற்பத்தித் திறன் அதிகரித்து பயிர்கள் அதிக அளவு சத்துக்களை மண்ணிலிருந்து எடுத்துக் கொள்ளும். இதனால் மண்வளம் குறையலாம்.

பூமி வெப்பமடைவதால் நுளம்புகளின் வாழ்நாள் மற்றும் இனவிருத்தியின் அளவு அதிகரிக்கிறது. இதனால் மலேரியா போன்ற நோய்கள் பரவுகின்றன. பக்டீரியா மற்றும் பங்கசுக்கள் வளர்வதற்கு உகந்த நிலை ஏற்படுதலால் விளைபொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் சேதமடைகின்றன. வளிமண்டலத்தின் ஓசோன் படலம் சிதைவதால் தோல் புற்றுநோய்கள் அதிகம் ஏற்படும். கடலோரப் பகுதிகளில் உப்புநீர் உட்புகுவதால் நிலத்தடி நீர் உவர்ப்புத் தன்மையாக மாறும்.

எனவே காடுகள் அழிவதை முழுவதுமாகத் தடுக்க வேண்டும். காடழிப்பானது மேய்ச்சல் நிலங்களை உருவாக்குவதற்கு அல்லது வேளாண்மை நிலங்களை உருவாக்கும் நோக்குடன் நடைபெறுகிறது. தொழிற்புரட்சிக்குப் பின்னர் நகரமாக்கமும் காட்டு வளங்களின் சுரண்டலும் இதனுடன் சேர்ந்து கொண்டன. பொதுவாக குறிப்பிடத்தக்க பரப்பளவு கொண்ட காடுகளை அழிப்பது உயிரியற் பல்வகைமையை (Biodiversity குறைத்து சூழலையும் தரம் குறைத்து விடுகின்றது.

**காட்டுவளங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்:**

காடழிப்பை சட்டத்தினால் கட்டுப்படுத்தல், காடுகளின் முக்கியத்துவம் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டுதல், காடுகள் அழிக்கப்பட்ட இடங்களில் மீள் காடாக்கல் செய்வதும் புதிய காடுகளை உருவாக்குவதும், மரஎரிபொருளுக்குப் பதிலாக பிரதியீட்டுப் பொருட்களைப் பயன்படுத்தல், காட்டுத்தீ பரவுதலை கட்டுப்படுத்தல், சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்படும் காடழிப்பைத் தடுக்க முறையான திட்டத்தை வகுத்தல், கடற்கரையோர கண்டல் தாவரங்களை பாதுகாத்தல்.

எனவே நாம் ஒவ்வொருவரும் சுற்றாடல் பாதுகாப்புக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். எமது ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் ஞாபகார்த்தமாக மரங்களை நடுவோம், மேலும் பொது இடங்களான புத்தவிகாரைகள், கோவில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் போன்ற மதத் தலங்களிலும், பாடசாலைகள், அலுவலகங்கள், தரிசு நிலங்கள், வீதி ஓரங்கள் போன்ற இடங்களிலும் மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகக் குறைந்தது வாழ்நாளில் ஒரு மரத்தையாவது நட்டு உலக சுற்றாடல் பாதுகாப்புக்கு ஒவ்வொருவரும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும்.



எஸ்.தஸ்தகீர்
(கல்முனை குறூப் நிருபர்)

# உலகத் தமிழர்களின் தலைவர் நீங்கள்; கச்சதீவு கோரிக்கையை கைவிடுங்கள்!





**'இலங்கைத் தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் உங்களுக்கு ஒன்றுதான்' - முதல்வர் ஸ்டாலினிடம் சீ.வி.கே.சிவஞானம் வேண்டுகோள்**

இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கைவிட வேண்டும் என்று வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவராகவிருந்த சீ.வி.கே.சிவஞானம் வலியுறுத்தி உள்ளார்.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி கச்சதீவை மீட்க வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னையில் பிரதமர் மோடி பங்கேற்ற நிகழ்ச்சியில் வலியுறுத்தினார். இது தொடர்பாக பிரதமர் மோடி எந்தப் பதிலும் தெரிவிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து இலங்கையில் குறிப்பாக ஈதமிழரிடம் கச்சதீவு குறித்த விவாதம் எழுந்துள்ளது. இலங்கையிடம் இருந்து இந்தியா கச்சதீவை திரும்பப் பெறக் கூடாது என்பது இலங்கைத் தமிழரின் நிலைப்பாடு.

இது தொடர்பாக சீ.வி.கே.சிவஞானம் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கச்சதீவு மீட்பு குறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியிருந்தார். மத்தியில் ஆளும் பா.ஜ.கவின் தமிழக தலைவர் அண்ணாமலையும் இதுபற்றி பேசியிருக்கிறார். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை நாங்கள் உலகத் தமிழர்களின் தலைவராகப் பார்க்கிறோம். உலகத் தமிழர் தலைவராகிய மு.க.ஸ்டாலினுக்கு ஈழத்தமிழரும் ஒன்றுதான், இந்தியத் தமிழரும் ஒன்றுதான்.

ஈழத் தமிழர்களுக்கு தமிழக மீனவர்களால் மட்டுமே பிரச்சினை இல்லை. தென்னிலங்கை சிங்கள மீனவர்களாலும் பிரச்சினை இருக்கிறது. மட்டக்களப்பு முதல் முல்லைத்தீவு வரை சிங்கள மீனவர்கள் தமிழர்களின் கடல் வளத்தைச் சுரண்டிச் செல்கின்றனர். இதனால் இலங்கைத் தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பது என்பது நெடுந்தீவு முதல் கச்சதீவு வரையில்தான். ஆகையால் கச்சதீவை இந்தியா திரும்பப் பெறுவது என்பது ஈழத் தமிழரின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக் கூடும். இதனால் தமது கோரிக்கையை தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் கரிசனையுடன் அணுக வேண்டும்.

இருநாட்டுத் தமிழர்களையும் தங்களது மக்களாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்க்க வேண்டும். கச்சதீவை திரும்பப் பெறாமல் இருதரப்பு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சீ.வி.கே.சிவஞானம் கூறினார்.

# லண்டனில் எதிர்வரும் 11ஆம் திகதி மலையக இலக்கிய மாநாடு - 2022

தமிழ் இலக்கியம், ஈழத்தமிழ் இலக்கியம் என்னும் பெரும் பரப்பில் ‘மலையக இலக்கியம்’ என்றும் பேசப்படும் அளவிற்கு இம்மலையக மக்கள் பற்றிய எழுத்துகள் அழுத்தமாகவும் தனித்துவமானதாகவும் தன்னை நிலைநிறுத்தி வளர்கின்றது.

மலையகம் என்ற உணர்வுடனும் மலையக மக்கள் என்னும் உறவுடனும் மேற்கிளம்பிய இவ்வெழுத்துக்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்குமான வழிகாட்டிகளாக நின்றவர்கள், கைவிளக்குடன் வழித்துணையாக வந்தவர்கள் என்று அனைவரையும் இந்த மலையக இலக்கிய மாநாடு மதிக்கிறது; போற்றுகிறது; ஆய்வு செய்து அறிமுகப்படுத்தி வளரச் செய்கிறது என்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

பெருங்கடலில் சிறுதுரும்பென மலையக இலக்கியத்துடன் நானும் மிதந்துள்ளேன் என்னும் நினைவுகளுடன் இந்த மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதிலும் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

தங்களுடைய ஆதிக்க விஸ்தரிப்புக்காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் உழைப்புச் சக்தியாக கூலிகளாகக் கூட்டி வந்த இம்மக்களின் சந்ததியினரை, ஒரு


மு. நித்தியானந்தன்


எச். எச். விக்ரமசிங்க

## மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்ரமசிங்க தொகுத்து வழங்கும் சி.வி.யின் 'மலையக அரசியல் தலைவர்கள்' என்னும் நூல் இம்மாநாட்டில் வெளியீடு

## 'இந்திய வம்சாவளி மக்களை அநாதரவாகக் கைவிட்டுச் சென்ற பிரித்தானியரின் தலைநகரில் மலையக இலக்கிய மாநாடு நடைபெறுவது மகிழ்வு தருகின்றது'– மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் வாழ்த்துகிறார்

நூற்றைம்பது ஆண்டு காலத்தின் பின்னர் அறுபதுகளின் பிற்பகுதியில் எதுவிதமான சட்டப்பாதுகாப்போ இருத்தலுக்கான உத்தரவாதமோ இல்லாமல் அநாதரவாக விட்டு ஓடிப் போன வெள்ளைக்காரர்களின்


தெளிவத்தை ஜோசப்

தேசத்துத் தலைநகர் லண்டனில் இம்மாநாடு நடைபெறுகிறது என்பது மகிழ்வைத் தருகிறது. இந்த மக்களைப் போலவே இந்த மக்கள் பற்றிய எழுத்துகளும் இலக்கியமும் பெரும் அலைக்கழிப்பிற்கும் அசட்டைகளுக்கும் அதிகார இலக்கிய அடக்குதல்களுக்கும் உள்ளாகிக் கிடந்த சூழலில், மலையக இலக்கியம் பற்றிய அறிமுகத்தையும் அதன் மீதான ஆர்வத்தையும் அது பற்றிய தேடல்களையும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்திய பதுளை மு.நித்தியானந்தனின் செயற்பாடுகள் மிகப் பெரியவை; சாதனை மிக்கவை.

யாழ் வைகறையூடாகத் தொடங்கிய மலையக இலக்கியப் பணிகளின் தொடர் செயற்பாடுகள் இவை. நித்தியுடன் வைகறையில் இணைந்து லண்டன் வரை உடனிருந்து இயங்கும் ஓவியர் கே.கே. ராஜாவும் நன்றிக்குரியவரே.

மு.நித்தியானந்தனும் எச்.எச்.விக்ரமசிங்கவும் தொகுத்து வழங்கும் சி.வி. யின் ‘மலையக அரசியல் தலைவர்கள்’ என்னும் நூல் இந்த மாநாட்டில் வெளியிடப் படுகிறது என்பதும் மகிழ்வைத் தருகின்றது.

மறைந்த மலையக எழுத்தாளுமைகளின் அரங்குகள், நூல் வெளியீடு, இருபதுக்கும் மேற்பட்ட மலையக நூல்கள் பற்றிய ஆய்வுகள், விமர்சனங்கள் என மலையக


சி. வி. வேலுப்பிள்ளை

இலக்கிய மாநாடு கலகலக்கப் போகிறது என்னும் நினைவே இம்மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக் கூறி அடிதொழ விழைகிறது.

# பத்திரிகைகள், நூலகம் இழைத்த குற்றம் என்ன?

## 1981 ஜூன் 01 யாழ். பொதுநூலகம் தீக்கிரை!

1981 மே மாதம் யாழ்ப்பாணம் பொது நூலகம் பற்றி எரிகிறது எனக் கேள்விப்பட்டதும் அங்கிருந்த பதற்றமான சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாமல், வீட்டிலே தடுத்தபோதும் கேளாமல் மறுநாளே எனது நீர்கொழும்பு வீட்டிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டுச் சென்று ‘மல்லிகை’ ஆசிரியர் டொமினிக் ஜீவாவுடன் நேரில் சென்று அந்தக் கொடுமையை பார்த்தேன்.

யாழ்.பொதுநூலகம் எரிக்கப்பட்டது அறிந்து வண.பிதா தாவீது அடிகள் மாரடைப்பால் காலமான செய்தி ஜீவா சொல்லித்தான் எனக்குத் தெரியும். அவரது படத்தை மல்லிகை முகப்பில் பார்த்துள்ளேன்.

எரியுண்ட நூலகத்தின் கோரக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்த போது, “அங்கே நிற்க வேண்டாம். அகன்று செல்லவும்”என்று ஒரு பொலிஸ்காரர் சொன்ன போது, “புவத்பத், புஸ்தகால கறபு வெறத்த குமக்த?” (பத்திரிகைகளும் நூல்நிலையமும் செய்த குற்றம் என்ன? ) என்று சிங்களத்தில் கேட்டேன். அந்த மிலிட்டறி பொலிஸ்காரர் என்னை விநோதமாகப் பார்த்தார். ஜீவா என்னை அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு வந்து விட்டார்.

நிலையம் வெறிச்சோடிக் கிடந்தது. அன்று மாலை உரிய நேரத்திற்கு வரவேண்டிய இரவு தபால் ரயிலும் காங்கேசன்துறையிலிருந்து தாமதமாகவே புறப்பட்டது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டதால் எனக்கு விடைகொடுத்து விட்டு ஜீவா அருகிலிருந்த தமது வீட்டுக்குச் சென்று விட்டார். இரவு பத்துமணிக்குத்தான் அந்த மெயில் புகையிரதம் வந்தது.

விரல்விட்டு எண்ணத்தக்க பயணிகளுடன் பதற்றத்துடனும் எனக்கு சிங்களமும் பேசத் தெரியும் என்ற தைரியத்துடனும் அந்தப் பயணத்தை தொடர்ந்தேன். கைத்தொலைபேசி இல்லாத அக்காலத்தில் நீர்கொழும்பில் எனது வீட்டார் மிகுந்த பதற்றத்துடனும் பயத்துடனும் எனது வரவுக்குக் காத்திருந்தனர்.

நீர்கொழும்பில் வாழ்ந்த இனவாத சிந்தனையற்ற சில முற்போக்கு எண்ணம் கொண்ட சிங்கள இளைஞர்களுடன் இணைந்தேன். வண.பிதா திஸ்ஸ பாலசூரியா அவர்களின் தலைமையில் ஒன்றுதிரண்டோம்.

புத்தள வெட்டு வாய்க்காலுக்கு அருகாமையில் ஒரு சிறிய கட்டடத்தில் சந்தித்து யாழ். பொதுநூலக எரிப்புக்கு கண்டனம் தெரிவித்து கூட்டம் நடத்துவதற்கும் நூல்கள் சேகரிப்பதற்காகவும் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தோம்.

அச்சமயம் நீர்கொழும்புக்கு அருகாமையில் சீதுவை என்னுமிடத்தில் வசித்த பிரபல சிங்கள திரைப்பட நடிகரும் பின்னாளில் அரசியல்வாதியாக மாறியவருமான விஜயகுமாரணதுங்கவும் எம்முடன் இந்தக் கூட்டத்தில் இணைந்து கொண்டார்.

யாழ்.பொதுநூலக எரிப்புக்கு கண்டனம் தெரிவித்து ஜி.செனவிரத்தின உட்பட சில மனித உரிமை ஆர்வலர்களுடன் இணைந்து கொழும்பில் புதிய நகரமண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் அச்சமயம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கமும் பேசுவதாக இருந்தது. ஏதும் குழப்பம் நேரலாம் என்று இறுதி நேரத்தில் பொலிசார் இக்கூட்டத்திற்கு அனுமதி வழங்கவில்லை.

நாம் அரசின் உளவுப்பிரிவினரால் கண்காணிக்கப்படுகிறோம் என்பது தெரியாமலேயே அந்த இயக்கத்தை முன்னெடுத்தோம். அக்காலப் பகுதியில் நான் அங்கம் வகித்திருந்த நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தில் அதன் அப்போதைய தலைவர் அ.மயில்வாகன் தலைமையில் நீர்கொழும்பில் நூல்களும் வர்த்தக அன்பர்களிடம் நிதியும் சேகரித்தோம்.

பின்னர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் நிதியுட்பட சேகரிக்கப்பட்டவற்றை கட்டடக் கலைஞர் வி. எஸ்.துரைராஜா முன்னிலையில் வழங்கினோம்.

1983 இனவாத வன்செயலினால் நானும் குடும்பமும் உறவினர்கள் எவருமில்லாத யாழ்ப்பாணம் அரியாலைக்கு இடம்பெயர்ந்த போது எம்முடன் எனது சேகரிப்பிலிருந்த பெருந்தொகையான நூல்களும் இதழ்களும் (சுமார் பத்துப் பெட்டிகள்) இடம்பெயர்ந்தன.



**எழுத்தாளர் சுஜாதா:**

1984 இல் தமிழ்நாடு சென்ற போது ஏப்ரில் மாதம் சென்னை ஏ.வி. எம்மின் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடந்த இலக்கியச்சிந்தனை விழாவில் முன்னணி எழுத்தாளர் சுஜாதாவை சந்தித்து உரையாடினேன். அவர் யாழ். பொது நூலக எரிப்பை கருவாகக் கொண்டு ‘இலட்சம் புத்தகங்கள்’ என்ற அருமையான சிறுகதையொன்றை படைத்திருந்தார்.

## உள்ளத்தை விட்டு நீங்காத வலி சுமந்த நினைவுகள்

1987 இல் அவுஸ்திரேலியா வந்த பின்னரும் விட்டகுறை தொட்டகுறையாக நூல்கள், இதழ்கள் படிப்பு, சேகரிப்பு குறைந்தபாடாயில்லை. நீர்கொழும்பில் நான் விட்டுவிட்டு வந்த எஞ்சிய நூல்கள் பலவற்றை எனது ஆரம்ப கால பாடசாலையான விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரிக்கு கொடுத்து விட்டேன்.

கடந்த 2011 ஆரம்பத்தில் வன்னி சென்ற போது நாம் அவுஸ்திரேலியாவிலிருந்து இயக்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதிக்கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கும் சென்றிருந்தேன்.அவுஸ்திரேலியாவில் அந்தக் கல்லூரியின் சில பழைய மாணவர்கள் அங்கு நூல்நிலையத்தை புனரமைக்கும் பணிகளை மேற்கொண்டார்கள். இதனை அறிந்து சில நண்பர்கள் ஊடாக முத்தையன்கட்டு அன்பு இல்லத்திற்கும் வித்தியானந்தா கல்லூரிக்கும் எனது சேகரிப்பிலிருந்த சில நூல்களையும் என்சைக்கிளோபீடியா பிரிட்டானிக்கா தொகுப்புகளையும் அனுப்பி வைத்தேன்.

இதுவிடயத்தில் இங்குள்ள எனது குடும்ப நண்பர் கருணாகரன் என்ற பொறியிலாளரும் எமக்கு உதவினார். நண்பர்கள் நவரத்தினம் இளங்கோ, சுந்தரமூர்த்தி ஆகியோர் தாம் சேகரித்த பொருட்களுடன் அந்த தொகுப்புகளையும் ஒரு கொள்கலனில் வன்னிக்கு அனுப்பி வைத்தனர்.

ஏற்கனவே மெல்பனில் ஈழத்தமிழ்ச்சங்கம் கிளேய்டன் என்னுமிடத்தில் தொடங்கிய தமிழ் நூல்நிலைய திறப்பு நிகழ்வுக்கும் சென்றிருக்கிறேன். உள்ளூர் கவுன்ஸிலர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு அளித்த நம்பிக்கை, காலப்போக்கில் அந்நூல்நிலையம் இயங்காமல் போனதும் தளர்ந்து விட்டது.


அதன் பிறகு நண்பர் மாவை நித்தியானந்தன் தொடக்கிய மெல்பன் கலை வட்டம் மற்றும் பாரதி பள்ளி ஆகியன இணைந்து ஒக்லி என்னுமிடத்தில் கவுன்ஸில் நடத்தும் பொதுநூலகத்தில் தமிழ்ப்பிரிவு ஒன்று கோலாகலமாகத் தொடங்கப்பட்டது. இந்நிகழ்விலும் கலந்து கொண்டதோடு 1999 இல் இலங்கை சென்று திரும்பும் போது நண்பர் மாவை நித்தியானந்தன் கேட்டுக் கொண்டதற்கிணங்க பல புத்தம் புதிய நூல்களை கொழும்பில் கொள்வனவு செய்து கொண்டு வந்து கொடுத்தேன்.

(எனக்கு வீட்டிலே ‘புத்தகம் காவி’ என்று ஒரு பட்டப்பெயர் உண்டு)

சத்தியநாதன் அவர்கள் திடீரென்று நூல்நிலையத்திலிருந்த அனைத்து நூல்களையும் வேறும் சில பொருட்களையும் ஒரு கொள்கலனில் ஏற்றி வன்னிக்கு அனுப்பிவிட்டார்.

20012002 காலப் பகுதியில் இயங்கிய அந்த நூலகம் எவருமே எதிர்பாராத நிலையில் மூடப்பட்டது. அந்த நூலகம் அமைந்திருந்த கட்டடத் தொகுதியும் அகற்றப்பட்டு அங்கே கார்கள் தரிப்பிடம் தோன்றியிருக்கிறது.

குறிப்பிட்ட வீதியில் அந்த இடத்தைக் கடக்கும் போது நெஞ்சைத் தடவிக் கொள்கிறேன். (மருத்துவர் சத்தியநாதனும் அருண். விஜயராணியும் மறைந்து விட்டனர்.) சிட்னிக்கு செல்லும் சமயங்களில் அங்கு தமிழ் அன்பர்களினால் நடத்தப்படும் நூலகத்தை பார்வையிட்டு ஆறுதலடைவேன். எனது நூல்களும் அங்கிருப்பது பெருமிதம் தரும். தற்போது மெல்பனில் எனது வீட்டு நூலகத்திலிருக்கும் நான் படித்து முடித்துவிட்ட நூல்களை என்ன செய்யப் போகிறீர்கள்? என்று எனது மனைவி அடிக்கடி கேட்டுக்கொண்டிருப்பார். எனக்குப் பிறகு இங்கே யார் படிக்கப் போகிறார்கள் என்று யோசிக்கும் போது மீண்டும் நெஞ்சு இலேசாக வலிக்கும். தற்போது நண்பர்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றேன்.



*(எழுத்தாளர் லெ.முருகபூபதியின் பதிவுகள்)*

# 'மனிதநேய ஒன்றிணைவு' அவசர நிவாரணப் பணியில் இணைந்து கொண்ட சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால் நாடு முழுவதிலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவசரகால நிவாரணங்களை வழங்கும் நோக்கில், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, CBL குழுமம், Citi, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC ஸ்ரீலங்கா ஆகியவற்றின் ஒன்றிணைவில் ஆரம்பிக்கப்பட்ட 'மனிதநேய ஒன்றிணைவு' எனும் மனிதாபிமான செயற்திட்டத்திற்கு சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி (Sunshine Holdings PLC) நிறுவனமும் தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளது . மேற்படி செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பங்காளியான சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் சுயாதீன கணக்காய்வாளர் PwC Sri Lanka உட்பட ஒருமித்த எண்ணம் கொண்ட பெருநிறுவன பங்காளிகளுடன் முன்னெடுக்கப்படும் 'மனிதநேய ஒன்றிணைவு' முயற்சியானது, நாடு முழுவதும் உள்ள 200,000 இற்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் 40,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்நிவாரணம் தற்போது விநியோகிக்கப்படுகின்றது.




## 200,000 இற்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட மனிதநேயப் பணி

பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும் வரை மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' வேலைத்திட்டமானது 60 90 நாட்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் மனித வள குழும தலைவர் மிச்சேல் சேனநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "சன்ஷைன் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தை சேர்ந்த நாங்கள் எப்போதும் நல்ல விஷயங்களை வாழ்வில் கொண்டு வருவதை நோக்காகக் கொண்டுள்ளோம். 'மனிதநேய ஒன்றிணைவு' அந்த நோக்கத்தின் ஒரு உருவகமாகும். தேசத்தைக் கட்டியெழுப்புவதில் நாம் அனைவரும் முன்னோக்கிச் செல்லவும், நமக்குரிய பங்களிப்பை ஆற்றவும் வேண்டியிருப்பதால், இத்தகைய பொதுநலன் பணியில் எங்களையும் ஒன்றிணைத்துக் கொண்டுள்ள டயலொக், MAS, Hemas, CBL மற்றும் Citi ஆகிய நிறுவனங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இலங்கை அதன் மீள்தன்மையால் வடிவமைக்கப்பட்டுள்ளது.



இடமிருந்து வலமாக சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி கூட்டுறவு தொடர்பு உதவி முகாமையாளர் பிரவீன் எடிமா, சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி கூட்டுறவு தொடர்பு மற்றும் சிஎஸ்ஆர் சிரேஷ்ட முகாமையாளர் ப்ரியா எப்பிடவல, சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி மனிதவள குழும தலைவர் மிச்சேல் சேனநாயக்க, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி குழுமத்தின் பிரதம அதிகாரி நவீன் பீரிஸ், டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி பெருநிறுவன மற்றும் வர்த்தக அபிவிருத்தி சிரேஷ்ட பொது முகாமையாளர் ரமணன் தேவைரகம், சர்வோதய சிரமதான இயக்க நிறைவேற்றுப் பணிப்பாளர் சமிந்த ராஜகருணா.

(06ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய உணவுப்...

மொத்த சந்தைக்கு விநியோகிக்கப்படும் விவசாய விளைபொருட்களில் ஒரு பகுதியை நேரடியாக கிராம சந்தைக்கும் வழங்க வேண்டும். இதன் மூலம் போக்குவரத்துச் செலவு குறைவடைவதனால், கிராமப்புற நுகர்வோர் குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், விவசாயிகள் அதிக விலையை பெற்றுக்கொள்ளவும் முடியுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

நிலவும் சூழ்நிலையைப் பயன்படுத்தி நியாயமற்ற விலையில் வர்த்தகம் செய்பவர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடு முழுவதும் இயங்கும் சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களை தொடர்ந்து செயற்படுத்துவதன் அவசியம் பற்றியும், வர்த்தகர்களின் விருப்பத்திற்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்ய இடமளிக்காமல் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த வேண்டுமென்றும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

வணிகம், வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திஸாநாயக்க, வர்த்தக அமைச்சின் செயலாளர் எஸ்.டி. கொடிகார மற்றும் அமைச்சின் துறைசார் நிறுவனங்களின் தலைவர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## அத்தியாவசிய மருந்து...

இந்த பேச்சுவார்த்தை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

தேசிய மருந்து உற்பத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் நன்கொடையாளர்களிடமிருந்து நிதி கிடைக்கப் பெற்றது. தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த நிதியை சுகாதாரத் துறைக்கு தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு உபயோகப்படுத்துமாறும் ஜனாதிபதி இதன்போது பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான 234 வகை மருந்து வகைகள் தற்போது தேசிய ரீதியில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உலக சந்தையில் மருந்துகளின் விலை வேகமாக அதிகரித்து வருவதையடுத்து தேசிய ரீதியில் மேற்கொள்ளப்படும் மருந்து உற்பத்தி நடவடிக்கைகளை விரைவு படுத்துமாறும் அவற்றின் தொகையை அதிகரிக்குமாறும் அதற்குத் தேவையான மூலப்பொருட்களை இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஓயாமடு மற்றும் ஹொரணை மில்லேவ பிரதேசங்களில் மருந்து உற்பத்தி நடவடிக்கைகளுக்காக முதலீடுகளை செய்வதற்கு 12 முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர். அங்கு மருந்துகள் உற்பத்திகளை சில மாதங்களில் ஆரம்பிக்க முடியுமென்றும் அதன் மூலம் 200 வகை மருந்துகளை உற்பத்தி செய்ய முடியும் என்றும் மருத்துவத்துறை உயரதிகாரிகள் இதன்போது தெளிவுபடுத்தியுள்ளனர். மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு நிதி கிடைத்து வருவதாகவும் உத்தேச வரவுசெலவு திட்டத்தின் மூலமும் தேவையான நிதியை அதற்காக ஒதுக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதன்போது அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் சுகாதாரத்துறையின் நிலைமைகளை வழமைக்கு கொண்டுவர முடியுமென்றும் அந்த அதிகாரிகள் இதன்போது தெரிவித்துள்ளனர். (ஸ)

## நிலையான அரசியல்...

நீதி அமைச்சில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் நீதி அமைச்சரினால் மேற்படி அமைப்புகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பு திருத்த சட்ட மூலத்துக்கான கருத்துக்களும் இதன்போது முன்வைக்கப்பட்டன.

அதன்போது கருத்து தெரிவித்த நீதியமைச்சர்:

மேற்படி சட்ட மூலத்தை நிறைவேற்றுவது தொடர்பில் காணப்படும் தடைகளை விலக்கிக் கொள்வதற்கு மக்கள் கருத்து மிக முக்கியமாகும் என்றும் அனைத்து மக்களது ஒத்துழைப்பும் அதற்கு அவசியமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு எதிர்காலத்தில் கொண்டுவரப்படுமென்றும் எனினும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு ஸ்திரமான அரசியல் சூழ்நிலை அவசியம் என்றும் தெரிவித்துள்ள நீதியமைச்சர், அதற்காக 21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றின் சுயாதீனத் தன்மை இல்லாதொழிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் சில ஆணைக்குழுக்கள் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் அந்த ஆணைக்குழுக்களுக்கான சுயாதீனத் தன்மையை வழங்கி. இல்லாதொழிக்கப்பட்ட ஆணைக்குழுக்களை மீண்டும் உருவாக்குவதற்காக அரசியலமைப்பு சபை ஒன்றை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மேற்படி அமைப்புகள் வழங்கியுள்ள சிறந்த யோசனைகளை அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் தொடர்பில் மகாநாயக்க தேரர்களுக்கும் தெளிவுபடுத்தியுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த முஸ்லிம் சிவில் சமூகத்தின் செயற்பாட்டாளர் சட்டத்தரணி ஜாவிட் யூசுப் 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான சட்ட மூலத்துக்கு நான்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ஸ)

## மண்ணெண்ணெய் ...

செய்யப்படும் மண்ணெண்ணெய்யை ஓரிரு தினங்களில் சந்தைக்கு விநியோகிக்க முடியும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிலையங்களில் மண்ணெண்ணெய் கையிருப்பு இல்லை என்றும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்றும் அந்த நிறுவனம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் நேற்றைய தினம் மண்ணெண்ணையை கொள்வனவு செய்வதற்காக பெருமளவு மக்கள் எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நின்றதை காண முடிந்தது. கடந்த சில தினங்களாக அவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, உலக சந்தையில் நேற்றைய தினம் எரிபொருளின் விலை சற்று குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே 31ஆம் திகதி 124.24 டொலராக அதிகரித்திருந்த ப்ரேண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை நேற்று முன்தினம் 117 டொலராக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் கடந்த மாதத்தில் உலக சந்தையில் எரிபொருளின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## நீர்த்தாங்கிக்குள் பதுக்கி வைத்த...

செய்யப்பட்டுள்ளார். 1000 லீற்றர் கொள்ளவு கொண்ட மூன்று பிளாஸ்டிக் நீர்த்தாங்கிகளில் சேகரிப்பட்டு வைத்திருந்த 3,000 லீற்றர் டீசலே இவ்வாறு கைப்பற்றப்பட்டது.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவின் ஊழல் குற்றத்தடுப்பு பிரிவினர் பொலிஸ் புலனாய்வு பிரிவினரின் தகவலுக்கமைய இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக டீசல் நிரப்பப்பட்ட நீர்த்தாங்கிகள் கைப்பற்றப்பட்டன.

அக்கரைப்பற்று திருக்கோவில் பிரிவுக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி.எச். செனவிரத்தினவின் மேற்பார்வையின் கீழ் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம். சதாத்தின் பணிப்புரைக்கமைவாக பொலிஸ் நிலையத்தின் ஊழல் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் நூர்தீனின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இச் சுற்றிவளைப்பை மேற்கொண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த டீசலை கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட டீசல் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டதுடன் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிசார் தெரிவித்தனா

## ஒடுக்கப்படும் தமிழ்... (03ஆம் பக்கத் தொடர்)

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியதாவது,

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும், காலிமுகதிடல், "அனைத்து கட்சி போராளிகள்" (அகபோ) தூதுக்குழுவினக்கும் இடையில் எனது இல்லத்தில் நிகழ்ந்தது. இந்த சந்திப்பில் திகாம்பரம் எம்பியும் கலந்துக்கொண்டார். அனைத்து கட்சி போராளிகள்" (அகபோ) சார்பில், விபீதக பொத்துவகே, நிராஷான் விதானகே, மனிஷ் கலப்பத்தி, கெலும் அமரதுங்க ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இன்றைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் நடைபெற்ற பேச்சுகளின் போது, தொடர்ந்து தமுகூ, அகபோ இடையில் பரஸ்பர தொடர்புகளை பேணி செயற்படுவது என்று முடிவானது. மலையக மக்கள், இலங்கை தேசிய தளத்தில் உள்வாங்கப்படுவது தொடர்பான, தமுகூ யின் மலையக அபிலாஷை ஆவணமும் அனைத்து கட்சி போராளிகளுக்கு வழங்கப்பட்டது.

இவர்களிடம் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் நான் எடுத்து கூறியது, "தம்பி, நாட்டில் ஜனாதிபதி, பிரதமர் ஆக வேண்டும் என துடியாய் துடிக்கும் பெருங்கட்சிகளை ஒரு கூடையில் போடுங்கள். எம்மை போன்ற ஒடுக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் முற்போக்கு கட்சிகளை வேறு விதமாக பாருங்கள்"

"தமிழர்களாகிய எங்களுக்கு உணவு இல்லை, மின்சாரம் இல்லை,.. என்பவை பழகிப்போன பிரச்சினைகள். போர் காலத்தில் பல்லாண்டுகளாக தமிழ் மக்கள் இப்படி வாழ்ந்தார்கள். மலை நாட்டில் போர் இல்லாமலேயே நம் மக்கள் தோட்ட சிறைகளுக்குள் இப்படிதான் வாழ்கிறார்கள்."

"கலவர காலங்களில் எங்கள் வீடுகள் எரிக்கப்பட்டன. எம் மக்கள் கொல்லப்பட்டார்கள். ஆகவே இவை எமக்கு சகஜம். ஆகவே புதிய இலங்கையை உருவாக்குவோம். இவை அனைத்திற்கும் தீர்வு தேடுவோம். மாற்றத்தை கொண்டு வர சொல்லிவிட்டு, நீங்கள் ஓரமாய் ஒதுங்கி நிற்காதீர்கள். அந்த தேடலில் நீங்களும் நேரடியாக பங்களியுங்கள். அந்த தீர்வு உணவு, மின்சாரம், எரிவாயு ஆகியவற்றுக்கு அப்பால் இருக்க வேண்டும்."

"மலையக தமிழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தோட்டங்களில் பின்தங்கிய நிலையில் வாழ்கின்றனர். அவர்களை தேசிய தளத்தில் உள்வாங்க அரசாங்கத்தில் பெரும் தயக்கம் காணப்படுகிறது. அதை நாம் முறியடிப்போம். நீங்களும் உதவ வேண்டும்."

இவற்றுக்கு, அனைத்து கட்சி போராளிகள் (அகபோ) சார்பில் பதிலளித்த பேச்சாளர் கெலும் அமரதுங்க கூறியதாவது, "நாம் உங்களை தேடி வந்து சந்தித்தமைக்கு காரணம் உண்டு. ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகளையும், ஜனநாயக கட்சிகளையும் நாம் சந்திக்கிறோம். நாம் எதிர்பார்க்கும் மாற்றம் நீங்கள் கூறுவது போன்று, உணவு, மின்சாரம் ஆகியவற்றுக்கு அப்பால் ஆனது. அதில் நாம் இந்நாட்டின் அனைத்து இன, மத மக்களுடன் பயணிக்க விரும்புகிறோம். நாம் பலரை சந்தித்தோம். மாற்றத்துக்காக எம்மை நேரடியாக பங்களிக்கும்படி இதுவரை யாரும் கூறவில்லை.

நீங்கள்தான் திறந்த மனதுடன் அதை கூறுகிறீர்கள். உங்களுடன் தொடர்புகளை பேண விரும்புகிறோம். மலையக தமிழ் மக்களையும் நாம் சரிசமமாக கவனத்தில் எடுப்போம்." என தெரிவித்தார்.

## 3 மாதங்களில் கொழும்பில்... (03ஆம் பக்கத் தொடர்)

வருமானம் பெறுபவர்களுக்கு 3,000 ரூபா மதிப்பிலான நிவாரணம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகரவாசிகளின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உலக உணவுத் திட்டம், உலகளாவிய உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மற்றும் பிற நன்கொடை நிறுவனங்களுடன் தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அவர் கூறினார்.

மேலும், உணவுப் பொருட்களின் வீண்விரயம் தொடர்பில் கொழும்பு மாநகர சபை கவனம் செலுத்தும் என்றும் அவர் கூறினார். கொழும்பில் நாளாந்தம் 350 மெட்ரிக் தொன் உணவு வீணடிக்கப்படுகிறது.

நகரின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவும் வகையில் இதை குறைக்க விரும்புகிறோம்," என்று மேயர் கூறினார்.

மேலும், நகரில் முச்சக்கர வண்டி சாரதிகள் உட்பட அன்றாட வருமானம் ஈட்டும் பலர் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாகவும் மேயர் ரோசி சேனாநாயக்க தெரிவித்தார்.

## மாத இறுதியில் IMF உடனான...

அத்தோடு அந்நிய செலாவணி இருப்பை அதிகரிப்பதற்காக மேலும் 1 பில்லியன் டொலர் எதிர்பார்க்கப்படுகிறது.

நெருக்கடியை தணிக்க உதவும் எந்தவொரு நிதி ஒப்பந்தமும் சர்வதேச நாணய நிதித்துடனான ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும். நன்கொடை வழங்கும் நாடுகளுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும்.

ஜப்பானுடனான உறவுகளில் ஏற்பட்டுள்ள இடைவெளியை மீள சரிசெய்வதற்கு சிறிது காலம் செல்லும். மருந்து குறித்த சர்வதேச உதவிகளை நாடுவதற்காக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி தலைமை வகிக்கின்றார்.

உணவு பற்றாக்குறை விவகாரத்தில் உரம் மற்றும் உணவு பாதுகாப்பிற்கு சமவுரிமையளிக்கப்படும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## முச்சக்கர வண்டிகளுக்கான... (03ஆம் பக்கத் தொடர்)

எனவே, எதிர்காலத்தில் நாடு எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து முச்சக்கரவண்டி தொழிற்துறையை பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடனும் பிரதமர் கலந்துரையாடினார். பெற்றோல் நிலையங்களில் பாதுகாப்பு மற்றும் எரிபொருள் விநியோகத்தை முறைப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

## சுவீகரித்த வயல் காணிகளை விரைவில்...

அதன்படி தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வன பாதுகாப்பு திணைக்களத்துக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளவயல்காணிகளின் விபரங்கள் அடங்கிய அறிக்கையை தமக்கு பெற்றுத் தருமாறும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.(ஸ)

## உணவு நெருக்கடிக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

FAO தெரிவித்துள்ளது.

விவசாயிகள் எதிர்நோக்கும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டால், 56 மாதங்களுக்குள் தற்போதைய விவசாயப் பற்றாக்குறையைப் போக்க முடியும் என்று பிரதமர் விளக்கினார்.

## எவோட்ஸ் 2022 க்கான... (03ஆம் பக்கத் தொடர்)

இரண்டாமிடத்தையும் கொழும்பைச் சேர்ந்த ஆர்.ரெஸ்மிலா மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு விரைவில் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

# அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் திங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பு

## நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டமூலத்தை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

அனைத்து கட்சிகளுடன் அது தொடர்பில் தெளிவுபடுத்தும் பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருவதாக தெரிவித்த அவர், எதிர்வரும் திங்கட்கிழமை அது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தற்போது கொண்டுவரப்படவுள்ள 21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு பாரிய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் இருந்து சிறந்தவற்றையும் 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் இருந்து சிறந்தவற்றையும் பெற்றுக் கொண்டே இந்தஅரசியலமைப்புதயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பு தொடர்பில் ஊடகம் ஒன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை நான் தயாரித்துள்ளேன் என்பதற்காக இது என்னுடைய தனி தீர்மானம் கிடையாது. அனைத்து தரப்பினரதும் கருத்துக்கள் யோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டே இது தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் மிகவும் பெறுமதியான யோசனைகளை முன்வைத்துள்ளன என்பது தொடர்பில் நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதற்கிணங்க அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்படக்கூடிய அனைத்து யோசனைகளையும் நாம் அதில் இணைத்துக் கொள்வோம்.

சர்வதேச ரீதியான ஜனநாயக நாடுகளின் முன்னேற்றத்தை பார்க்கும் போது அது அங்குள்ள கட்சிகளின் சாத்தியத் தன்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பிரிட்டிஷ் அரசாங்கத்தை எடுத்துக்கொண்டால் அங்குள்ள கட்சிகளின் கொள்கைகள் மிகவும் சிறப்பானவை. எமது நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பெரும்பாலான கட்சிகள் கூட கொள்கைகளை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை.

## மின்சாரம், தொலை தொடர்பு...

பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தற்போதுள்ள தொலைத்தொடர்பு வரி 11.25% இல் இருந்து 15% ஆக அதிகரிக்கப்பட்டதாக தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நேற்று நள்ளிரவு முதல் தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன. இதற்கு மேலதிகமாக VAT வரியை 8%லிருந்து 12% ஆக அதிகரிப்பதன் மூலம் தொலைபேசி கட்டணம் கிட்டத்தட்ட 08% வரை அதிகரிக்கும் என்று தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு (TRC) தெரிவித்துள்ளது. இருப்பினும், இணைய கட்டணங்களுக்கு தொலைத்தொடர்பு வரி பொருந்தாது எனவும் VAT வரிக்கு அமைவாக இணைய கட்டணங்கள் 4% ஆல் அதிகரிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## பசில், திருக்குமார் நடேசன்...

நிமல் ரணவீர அவர்கள் இருவரையும் மேற்படி வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தி தொம்பே,மல்வானை மாபிட்டி பிரதேசத்தில் 16 ஏக்கர் பரப்பளவு காணியை கொள்வனவு செய்து நீச்சல் தடாகத்துடன் கூடிய சொகுசு வீடு ஒன்றை நிர்மாணித்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுக்கும் திருக்குமார் நடேசன் ஆகிய இருவருக்கும் எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர்கள் இருவரையும் நிரபராதிகளாக தெரிவித்து அவர்களை விடுவிக்குமாறு கம்பஹா நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் இருவருக்கும் எதிரான வழக்கை சட்ட மாஅதிபர் மூன்று குற்றப்பத்திரிகை மூலம் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## பாணந்துறையில் மரக்கறி...

மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. துப்பாக்கிதாரிகள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கஹந்தகமகே உள்ளிட்ட...

நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆரியதாச பீரிஸ் மற்றும் திலீப் பெர்னாண்டோ ஆகியோரும் ஆகஸ்ட் 08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வரும் இந்த வழக்கில் மஹிந்த கஹந்தகம சந்தேக நபராக பெயரிடப்படுவாரென கோட்டை நீதவான் திலின கமகே தெரிவித்துள்ளார். சந்தேகநபர் கஹந்தகம குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டார்.

## சமையல் எரிவாயு...

எரிவாயு கப்பல் ஒன்று இலங்கைக்கு வருமெனவும் அந்த கப்பல் வரும் பட்சத்தில் செவ்வாய்கிழமை முதல் எரிவாயு விநியோகம் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## லாஃப் Gas விநியோகம்...

சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்ததாக அந்நிறுவனம் முன்னதாக தெரிவித்திருந்தது.

## காணாமல் போன...

நிலையில், நேற்று முன்தினம் மாலை 4.00 மணி அளவில் மருதமுனை 65 மீட்டர் வீட்டுத்திட்ட குடியிருப்பு பகுதியின் பின்பக்கமாக உள்ள குளத்துக்குள் உயிரிழந்த நிலையில், தாயின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு கல்முனை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எம். பதுர்தீன் மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்று, பிரேத பரிசோதனைக்காக சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலால் தலைமையில் பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 'மனிதநேய ஒன்றிணைவு' அவசர... (05ஆம் பக்கத் தொடர்)

எனவே, சவால்கள் எமக்கு எதிராக உள்ள போதிலும், நமக்கிடையிலான ஒன்றிணைந்த காரணத்தின் கீழ் நாம் தொடர்ந்து வலிமையிலிருந்து வலிமைக்கு முன்னேறுவோம். இலங்கை மீண்டும் எழுச்சி பெறும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன், மேலும் இந்த செயலூக்கமான முயற்சி செழித்தோங்குவதைக் காண்பதில் ஒருமித்த எண்ணம் கொண்ட பங்காளிகளுடன் இணைவதில் சன்ஷைன் மகிழ்ச்சி அடைகிறது"என்றார்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் டயலொக் என்டர்பிரைஸ் பிரிவின் பிரதம அதிகாரி நவின் பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இந்தக் கூட்டமைப்பில் நல்ல பல நிறுவனங்கள் இணைந்திருப்பதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். சவாலான காலகட்டங்களுக்கு மத்தியில், 'மனிதநேய ஒன்றிணைவு' போன்ற நேர்மறையான, நோக்கத்துடன் கூடிய முயற்சிகள் கருத்துருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுவதைக் காண்பது நமது தேசத்தின் வளர்ச்சிக்கு நிறைய நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது. 17 மில்லியன் வாடிக்கையாளர்களையும், இலங்கையின் பரந்த வலையமைப்பையும் கொண்டுள்ள டயலொக் நிறுவனமானது, அவசியத் தேவையுடையோரின் பசியைப் போக்க உதவுவதை, காலத்தின் தேவைக்கு ஏற்ற கௌரவிக்கப்படுவதான செயற்பாடாக பணிவுடன் நோக்குகின்றது. ஒருமித்த எண்ணம் கொண்ட நிறுவன பங்காளர்களுடன் ஒன்றிணைந்தவாறு, பாதிக்கப்பட்டுள்ள 200,000 குடும்பங்களுக்கு அவசர நிவாரணங்களை வழங்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம், இன்றுவரை இந்த இலக்கின் ஒரு பகுதியை நாங்கள் ஏற்கனவே அடைந்துள்ளோம். அவ்வாறே இன்னும் பலவற்றைச் சாதிக்கும் வகையில் இந்த ஒன்றிணைந்த முயற்சியில் எங்களுடன் கைகோர்க்க முன்வருமாறு இலங்கையின் ஏனைய பெரு நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்" என்றார்.

'மனிதநேய ஒன்றிணைவு' அவசர நிவாரண திட்டத்தில் இணைந்து மேற்படி நிவாரண நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதில் பங்களிப்பு செலுத்த முன்வருமாறு அனைத்து பெருநிறுவனங்களுக்கும் 'மனிதநேய ஒன்றிணைவு' அழைப்பு விடுக்கின்றது. மேலதிக விபரங்களுக்கு, https://www.dialog.lk/corporate வலைத்தளத்தை பார்வையிடவும்.




# நீண்டகாலமாக புனரமைப்பின்றி கிடக்கும் வட்டுவாகல் பாலம்

பரந்தன் குறுாப் நிருபர்)

முல்லைத்தீவு பரந்தன் ஏ35 வீதியில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலத்தின் பல இடங்களில் உடைவுகள் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. முல்லைத்தீவு நகருக்கான பிரதான போக்குவரத்து வீதியாகக் காணப்படுகின்ற ஏ35 வீதியின் மிக நீளமான பாலமாக காணப்படும் வட்டுவாகல் பாலம் இதுவரை புனரமைக்கப்படாமையால் மக்கள் அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.

அதாவது இப்பாலம் கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தம் மற்றும் யுத்தம் என்பவற்றால் சேதமடைந்த பாலம் தற்காலிக புனரமைப்பு செய்யப்பட்ட நிலையிலேயே இன்று வரை காணப்படுகின்றது. இப்பாலத்தின் பாதுகாப்பு தூண்கள் முழுமையாகவே உடைந்துள்ளதுடன், பாலத்தின் பலஇடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. ஏற்கனவே உடைவுகள் ஏற்பட்ட இடங்களில் தற்காலிக புனரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும், ஏனைய இடங்களில் உடைவுகள் ஏற்பட்டு ஆபத்து நிலையில் காணப்படுகின்றது. ஏற்கனவே இப்பாலத்தில் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதுடன், உயிரிழப்பு நிகழ்ந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.




# வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்து; பாடசாலை மாணவன் பலி

நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்த தொலைபேசி கம்பத்துடன் மோதி பின்னர் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மாணவன் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் மேலும் ஒரு சிறுவன் படுகாயமடந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை(03) காலை 9.30 மணியளவில் குஞ்சர் கடை சாந்தி மண்டான் வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மண்டான் கரணவாய் மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த செல்வமோகன் பானுஜன் (வயது 17) என்பவர; ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அவருடன் சென்ற அதே பகுதியைச் சேர்ந்த சிவனேசன் கலைஒளி (வயது 15) என்ற சிறுவன் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



மோட்டார் சைக்கிள் வீதியால் பயணித்த போது மாடு ஒன்று குறுக்கே சென்றுள்ளது. இதனாலேயே விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் இம்முறை க.பொ.த.சாதாரணதரப் பரீச்சைக்கு தோற்றிய மாணவராவார். வெளிநாட்டில் வசித்து வந்த அவரின் தந்தையார் ஊருக்கு வந்தமையால் ஆலயம் ஒன்றில் பொங்கல் செய்ததாகவும் பூஜைக்கு தேவையான மாலை வாங்குவதற்காக சென்ற போதே இசசைம்பவம் இடம்பெறறதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இசசம்பவ ம் தொடர்பில் நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# 21 ஆவது திருத்தச்சட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் அவசியம்

கோப்பாய் குறுாப் நிருபர்

21 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்படுகின்ற அரசியல் அமைப்புப் பேரவையிலும், சுயாதீன ஆணைக்குழுக்களிலும் போதிய பிரதிநிதித்துவம் தமிழ் மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும். இல்லையென்றால்

தமிழ் தேசியக்கட்சிகள் அதனை ஆதரிக்கக் கூடாது என்றும் மீறி ஆதரித்தால் மக்கள் முன்னால் அவர்கள் அம்பலப்படுத்தப்படுவார்கள் என அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (02) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,




அரசியல் யாப்பிற்கான 21ஆவது திருத்தம் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி அதிகாரங்களை அமைச்சரவை, சுயாதீன ஆணைக்குழுக்கள், அரசியல் அமைப்பு பேரவை என்பவற்றிடம் பகிர்ந்து வழங்குவதே திருத்தத்தின் நோக்கமாகும். இத்திருத்தம் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் தென்னிலங்கையில் சூடுபிடித்துள்ளன.

எதிர்க்கட்சிகள் 21 ஆவது திருத்தத்தை ஆரம்பமாகக் கொண்டு ஜனாதிபதி முறை முழுமையாக நீக்கப்படல் வேண்டும் என்றே வற்புறுத்துகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி , ஜே.வி.பி. தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என அனைத்தும் இதில் அடக்கும்.

எனவே தமிழ் மக்கள் மத்தியில் பணியாற்றும் அமைப்பு என்ற வகையில் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினராகிய நாம் தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் பின்வரும் இரு கோரிக்கைகளை 21 ஆவது திருத்தம் தொடர்பாக முன்வைக்கின்றோம். 1. 21 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்படுகின்ற அரசியல் அமைப்புப் பேரவையிலும், சுயாதீன ஆணைக்குழுக்களிலும் போதிய பிரதிநிதித்துவம் தமிழ் மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

2. குறைந்தபட்சம் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களிலாவது தீர்மானிக்கும் அதிகாரம் தமிழ்ப் பிரதிநிதிகளிடம் இருத்தல் வேண்டும். இந்த இரண்டு கோரிக்கையையும் அரசாங்கம் ஏற்காவிட்டால் 21ஆவது திருத்தத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆதரிக்கக்கூடாது. தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தப் பணியை மேற்கொள்ளாது ஆதரவு கொடுத்தால் தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசியக் கட்சிகளை பகிரங்கமாக அம்பலப்படுத்துவோம் என அவர் தெரிவித்தார்.

# நீரில் மூழ்கியதில் இருவர் சடலமாக மீட்பு இருவரை காப்பாற்றிய வளர்ப்பு நாய்



வவுனியா விசேட, ஓமந்தை விசேட நிருபர்கள்

வவுனியா ஈரப்பெரியகுளத்தில் நான்கு மாணவர்கள் நீரில் முழ்கிய நிலையில் இருவர் சடலமாகவும், இருவர் ஆபத்தான நிலையிலும் மீட்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் (02.06) மாலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியைச் சேர்ந்த 15, 16 ஆகிய வயதுகளையுடைய மாணவர்கள் மாலை ஈரப்பெரியகுளத்திற்கு சென்றுள்ளனர். நான்கு மாணவர்களும் இணைந்து தமது வளர்ப்பு நாயை குளிப்பாட்டி நீராடிக் கொண்டிருந்த சமயத்தில் நான்கு மாணவர்களும் நீரில் முழ்கியுள்ளனர். முதலில் நால்வரில் இருவர் அங்கு நீரில் மூழ்கினர். இதை அவதானித்த மற்றைய இருவரும் அவர்களை காப்பாற்ற முற்பட்டபோது அவர்களும் மூழ்கினர். இதையடுத்து வளர்ப்பு நாய் இருவரையும் காப்பாற்ற அங்கிருந்தவர்களை குளத்தின் கரைக்கு அழைத்து சென்றதாக மக்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இருவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மே லும் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து அயலவர்களின் உதவியுடன் குளத்தில் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்ட சமயத்தில் மற்றைய இரு மாணவர்களும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். நதீச விதுசர (வயது 15), கைலாஸ் (வயது 16) ஆகிய இரு மாணவர்களே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட இரு மாணவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனையின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## நீர்த்தொட்டியில் வீழ்ந்து குழந்தை பலி

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பூவரசங்குளம் நித்தியநகர் பகுதியில் நீர்த்தொட்டியில் வீழ்ந்து இரண்டரை வயதுக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. இச்சம்பவத்தில் சேமமடு பகுதியை சேர்ந்த கிருசாந்தன் தட்சாயினி என்ற இரண்டரை வயது குழந்தையே உயிரிழந்துள்ளது. நேற்று (03) காலை குழந்தை பெற்றோருடன் உறவினர் வீட்டிற்கு சென்ற நிலையில் ஏனைய சிறுவர்களுடன்விளையாட்டில் ஈடுபட்டிருந்தது. எனினும் சற்று நேரத்தில் குழந்தையின் குரல் கேட்காமையால் அவரது தாயார் குழந்தையை தேடியுள்ளார். இதன்போது அருகில் இருந்த நீர்தொட்டியில் குழந்தை வீழ்ந்து கிடந்தமை கண்டறியப்பட்டது. குழந்தை உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. எனினும் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

## வவுனியாவில் மாயமான இளைஞன் வீடு திரும்பினார்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா குருமன்காட்டில் வசித்து வந்த கயேந்திரன் கிருத்திகன் என்ற இளைஞன் கடந்த சில தினங்களாக காணாமல் போய்விட்டதாக அவரது உறவினர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை மேற்கொண்டனர். எனினும் நேற்று மாலை இளைஞர் வீடு திரும்பியுள்ளதாகவும் வீட்டில் ஏற்பட்ட முரண்பாட்டினால் யாழ்ப்பாணத்திலுள்ள நண்பர் ஒருவரின் வீட்டிற்கு ஒருவரிடமும் சொல்லாமல் சென்றுவிட்டதாகவும் இளைஞன் தெரிவித்துள்ளான்.

## இந்திய அரசின் நிவாரண பொதிகள் பிரதேச செயலகங்களுக்கு விநியோகம்



(பரந்தன் குறுாப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு புகையிரதமூடாக நேற்றுமுன்தினம் (02.06 .2022கொண்டு வரப்பட்ட இந்திய அரசின் நிவாரண பொதிகள் இரவிரவாக பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் நேற்றுமுன்தினம் 02.06.2022 கிளிநொச்சி மாவட்டத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

புகையிரதத்தில் எடுத்துவரப்பட்ட உணவு பொதிகள் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இறக்கப்பட்டு நான்கு பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மாவட்டச்செயலக அதிகாரிகள்,பிரதேச செயலாளர்கள், மாவட்டச்செயலக பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து பொதிகளை இறக்கி ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர். 4450 பொதிகளில் 222500 கிலோக்கிராம் அரிசியும் 50 பொதிகளில் 1kg நிறையுடைய 750 பால்மா பைக்கற்றுக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவை பிரதேச செயலகங்களூடாக 20000 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 10900 கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 3720 பயனாளிகளுக்கும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 3380, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 2000 பயனாளிகளுக்குமாக மொத்தமாக 20000 பயனாளிகளுக்கு நிவாரண பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடலில் மிதந்த பூச்சிக் கொல்லி மருந்து போத்தல்கள்

யாழ்.விசேட நிருபர்

நெடுந்தீவு கடலில் மிதந்து வந்த மர்ம பொதியிலிருந்து 35 போத்தல் பூச்சிக்கொல்லி மருந்து போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன. நெடுந்தீவு கடலில் மர்ம பொதி ஒன்று மிதப்பதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை கடற்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கடற்படையினர் பொதியினை மீட்டு சோதனையிட்ட போது, அவற்றில் இருந்து 35 பூச்சிக் கொல்லிமருந்துபோத்தல்களைமீட்டுள்ளனர். இந்தியாவில் இருந்து இவற்றை கடத்தி வந்து, கடற்படையினரை கண்டு கடத்தல்காரர்கள் பொதியினை கடலில் வீசி விட்டு தப்பி சென்று இருக்கலாம் என கடற்படையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

## நியமனம்



(மன்னார் குறுாப் நிருபர் )

இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சங்கத்தின் மேற்பார்வை உத்தியோகத்தராக மன்னார் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளரும், மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் செயலாளருமான ப.ஞானராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.



விதைப்பொதிகள், பயன்தரு மரக்கன்றுகள் மற்றும் இயற்கை உரப்பொதிகள் என்பனவற்றை அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கிவைக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. நேற்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு விதைப் பொதிகளையும் பயன்தரு மரக்கன்றுகளையும் சம்பிரதாயபூர்வமாக வழங்கி வைத்தனர்.

படம் பருத்தித்துறை விசேட




# கேஸ் சிலிண்டர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

நோர்வூட், புளியாவத்தை கடைவீதியில் வசிக்கும் மக்கள், சமையல் எரிவாயு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



ஐந்து மாதங்களாக சமையல் எரிவாயு இன்றி தாம் பரிதவிப்பதாகவும், எனவே, தங்களுக்கு கூடியவிரைவில் அதை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் நேற்று (03) போராட்டத்தில் குதித்தனர்.

ஹற்றன் சாஞ்சிமலை பிரதான வீதியை மறித்து, வீதி நடுவே 'வெற்று' சமையல் எரிவாயு சிலிண்டர்களை அடுக்கி வைத்து, பதாகைகளை தாங்கியும், கோஷங்களை எழுப்பியும் மக்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் அவ்வீதி ஊடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. ஹற்றனிலிருந்து சாஞ்சிமலை, பொகவந்தலாவை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு வந்த மக்கள் நீண்ட நேரம் வாகனங்களில் காத்திருந்தனர். பலர் மாற்று வழிகளைத்தேடி திரும்பி சென்றனர். பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.



" எங்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக சமையல் எரிவாயு விநியோகிக்கப்படவில்லை. மண்ணெண்ணெய் பகிரப்படவில்லை. நகரப்பகுதி என்பதால் விறகடுப்பு பயன்படுத்துவதிலும் ஆயிரம் தடைகள் காணப்படுகின்றன.

இந்நகரில் லிற்றோ சமையல் எரிவாயு முகவர்கள் மூவர் இருக்கின்றனர். அவர்களுக்கு நிறுவனத்தால் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவில்லை. இதனால் நாம் எல்லா வழிகளிலும் துன்பப்படுகின்றோம். எனவே, சமையல் எரிவாயுவை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." என போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், சமையல் எரிவாயுவைக் கூட விநியோகிக்க முடியாமல் திண்டாடும் அரசுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

எரிவாயு வழங்குவதற்கான கூப்பன் தமக்கு வழங்கப்படாமைக்கும் எதிர்ப்பை பதிவுசெய்தனர்.

நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு நோர்வூட் பொலிஸார் முற்பட்டனர். எதிர்வரும் 08 ஆம் திகதிக்கு பிறகு சமையல் எரிவாயுவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். இதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. போக்குவரத்து நடவடிக்கையும், வழமைக்கு திரும்பியது.

# கிரியெல்லை ஹொரண வீதியில் மண்சரிவு அபாயம்



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கிரியெல்லை ஹொரண வீதியில் மண்சரிவு இடம்பெற்றுள்ளது. பொலிஸார், பொதுமக்கள் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக அகற்றப்பட்டு தடைப்பட்டிருந்த போக்குவரத்து நிலை சீராக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் போக்குவரத்து தடைப்பட்டமையால் பயணிகள், வாகனங்கள் மாற்று வழிகளில் அனுப்பட்டனர். இதே வேளை இப்பகுதியில் மேலும் பல இடங்களில் மண்சரிவுகள் ஏற்படலாம் என கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாலம் இன்மையால் பொதுமக்கள் மாணவர்கள் பாதிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை இம்புல்பே பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வலேபொடை பிரதேசத்தில் வளவை கங்கையை கடந்து செல்வதற்குப் பாலம் ஒன்று இன்மையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.

800 குடும்பங்களைச் சேர்ந்த 3000 இற்கும் அதிகமான மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். பிரதேசத்தின் மாணவர்கள், அரச தனியார் துறைகளில் தொழில் புரிவோர் தேயிலை மற்றும் விவசாய துறைகளில் ஈடுபடுவோர் பொதுமக்கள் என பலரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். மழைகாலங்களில் இவற்றைக் கடக்க முயற்சித்த பலர் தவறி விழுந்து மரணமடைந்துள்ளதாக கூறும் மக்கள் பல வருடங்களாக பொறுப்பு வாய்ந்த அரசாங்கங்களிடம் இவ்விடயத்தை முன்வைத்த போதிலும் இந்த ஆபத்திலிருந்து மீளும் வகையில் தீர்வு கிடைக்கவில்லை எனக் கூறுகின்றனர்.



எனவே எதிர்காலத்தில் மேலும் பல மரணங்கள் ஏற்பட வழிவைக்காமல் பிரதேச மக்களின் அன்றாட நடவடிக்கைகளை சிரமம் இன்றி மேற்கொள்ள இந்த ஆற்றை கடக்க அவசியமான பாலத்தை அமைத்துத் தர பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆவண செய்ய வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கொதித்தாறிய நீரை அருந்துமாறும் அறிவுறுத்தல்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

வெள்ள நிலைமைகள் ஏற்பட்டுள்ள பகுதிகளில் கொதித்து ஆறிய நீரை அருந்துமாறு பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.



இரத்தினபுரி மற்றும் சுற்றுப் புற பிரதேச மக்களுக்கு இப் பிரதேச பொது சுகாதார அதிகாரிகள் இந்த அறிவுறுத்தலை வழங்கி வருகின்றனர்.

கடந்தசில தினங்களாக இரத்தின புரி மாவட்ட த்தில் பெய்த அடை மழை காரணமாக இப்பகுதியின் தாழ் நிலங்கள் வெள்ளத்தால் மூழ்கியதையடுத்து நிலவிய அச்ச நிலமை நீங்கியுள்ளன. தற்போது தாழ் நிலங்களில் தேங்கியுள்ள நீர் படிப்படியாக வடிய ஆரம்பித்துள்ளன எனினும் இப்பிரதேசத்தில் சில இடங்களில் நீர் முற்றாகவும் வடியாது தேங்கி நிற்பதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இப்பகுதியில் டெங் கு மற்றும் டெங்கு நோய் பரவும் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

எனவே கொதித்தாறிய நீரை அருந்தமாறு பொதுச் சுகாதாரத்துறை அதிகாரிகள் பொதுமக்களை அறிவுறுத்தி வருகின்றனர்.

# 21ஆவது திருத்தத்தின் கீழ் சிறுபான்மை சமூகங்களை சேர்ந்தவர்கள் நியமிக்கப்படவேண்டும்

பதுளை தினகரன் விசேட நிருபர்

21ஆவது சட்ட திருத்தத்தின் கீழ் அமையவிருக்கும் சட்டவாக்க சபையில், சிறுபான்மை சமூகங்கள் சார்பிலும், ஜனாதிபதியினால் மூன்று பேர் நியமிக்கப்பட வேண்டுமென முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அ. அரவிந்தகுமார் குறிப்பிட்டுள்ளார்.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவிற்கு, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார், அனுப்பியுள்ள அவசரக் கடிதமொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

இக்கடிதத்தின் பிரதிகள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

தொடர்ந்து அக்கடிதத்தில் 21ஆவது சட்ட திருத்தத்தின் கீழ் அமையவிருக்கும் சட்டவாக்க சபையில் சிறுபான்மை சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், எந்தவொரு சிறுபான்மை சமூகத்தவரும் கட்டாயம் இடம்பெறவேண்டுமென்று, குறிப்பிட்ட ஆவணத்தில் எந்தவொரு இடத்திலும் உத்தரவாதப்படுத்தப்படவில்லை.

21 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் தொடர்பாக பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் 02.06.2022ல் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, குறிப்பிட்ட சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன. உத்தேச சட்டவாக்க சபையில் சிறுபான்மை சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், உறுப்பினர்கள் நியமிக்கப்படல் வேண்டுமென்ற கோரிக்கையினை நான் அழுத்தமாக முன்வைத்தேன். அவ்வகையில், ஜனாதிபதியினால் ஒருவரை சட்டவாக்க சபைக்கு நியமிக்க வேண்டுமென்ற முன்மொழிவும் ஏற்கனவே முன்வைக்கப்பட்டிருந்தது.

நாட்டின் பெரும்பான்மை சிங்கள மக்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒருவரையும், வடகிழக்கு தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒருவரையும், இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒருவரையும், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒருவரும் என்ற வகையில் நால்வர் அரசியல் திருத்தச் சட்டவாக்க சபைக்கு நியமிக்கப்படல் வேண்டும்.

அத்தோடு அவர்கள் நால்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ் உத்தேச சட்டவாக்க சபையில் சபாநாயகர், பிரதமர், எதிர்கட்சி தலைவர், ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவரும், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவரினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள் என்ற வகையிலும், முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.



நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குராங்கெத்த பிரதேச செயலகத்திற்கு முல்லோயா தோட்டத்திலும் ஒப் தோட்ட மக்களுக்கு இந்தியா அரசின் நிவாரணபொதிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. கிராம சேவகர் தலைமையில் இந்த பொருட்கள் மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (படம்: கம்பளை நிருபர்)

# மரத்திலிருந்து வழுக்கி விழுந்து பாடசாலை மாணவன் மரணம்

(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

பொகவந்தலாவ மாவெலி வனப் பகுதிக்கு தனது தந்தையுடன் விறகு சேகரிக்கச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் மரத்திலிருந்து வழுக்கி விழுந்ததில் உயிரிழந்துள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை வேளையில் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, சிறுவன் மரத்திலிருந்து தவறி விழுந்ததை அவரது தந்தை தோட்ட மக்களுக்கு அறிவித்ததையடுத்து சிறுவன் பொகவந்தலாவ வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டப்போது இடைவழியில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொகவந்தலாவ சென். விஜயன்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த 16 வயதுடைய சுரேந்திரகுமார் அபிஷாந்த் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

தரம் 1 – 5 வரை சென்.விஜயன்ஸ் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த சிறுவன் தரம் 6 தொடக்கம் அனுராதபுரம் கெக்கிராவ பெப்டிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் 2022ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ளதாகவும் பொலிஸாரின்ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

ஐந்து சகோதரர்களுடன் பிறந்த சுரேந்திரகுமார் அபிஷாந்த் தனது குடும்பத்தில் மூத்த பிள்ளையாவார்.

# சிவனு லக்சுமனன் மலையக மண்ணுரிமைக்காக உயிரை தியாகம் செய்தவர்



தலவாக்கலை குறூப் நிருபர்

சிவனு லக்சுமனன் மலையக மண்ணுரிமைக்காக உயிரை தியாகம் செய்த மண்ணின் மைந்தர்களை நினைவு கூறுவதில் நான் பெருமையடைகின்றேன் என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் தெரிவித்துள்ளார்.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற மலையக தியாகிகள் தின நிகழ்வில் இராஜாராம் கலந்து கொண்டு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையின் வரைப்படத்திலே எத்தனையோ சமூகம் போராடி பல உரிமைகளையும் பல சாத்தியமான விளைவுகளையும் வென்றெடுத்து இருக்கின்றது. எங்கள் மலையக சமூகத்தை பார்க்கும் போது இருநூறு வருடங்கள் அடிமைகளாகவே இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்கள் மலையக சமூகத்துக்காக தான் சார்ந்த சமூகத்தின் விடிவுக்காக கொடுப்பதற்கென்று எதுவும் இல்லாத சந்தர்ப்பத்தில் தன் உயிரை துச்சமாக மதித்து அதையே அர்பணித்து அல்லது பரிசாக கொடுத்து தன் சமூகத்திற்கு விடுதலை கிடைக்கும் என்று போராடி மடிந்த மாவீரர்களை நாம் நினைவு கொள்வதில் உணர்ந்து கொள்வதில் பின் நிற்கும் சமூகமாக இருக்கின்றோமா? என்ற கேள்வி எங்கள் மத்தியில் உள்ளது. எங்களை பொறுத்தமட்டில் இந்த நினைவேந்தல் நாளிலே எங்கள் கோரிக்கையாக அடுத்த தலைமுறையின் பிள்ளைகள் மத்தியில் முன்வைப்பது மலையக சமூகத்தை ஒரு தேசிய இனமாக அங்கீகரியுங்கள்.

ஐயன் பெருமாள், ராமசாமி, வீராசாமி வீர வரலாற்றை நாங்கள் இந்தியாவினுடைய விடுதலைக்காக போராடிய பகவத் சிங்,சுகதேவ், ராஜகுரு போன்றவர்களின் வீரத்தோடு ஒப்பிடலாம். அதே போன்று இன்று சிவனு லக்சுமனன் இவர் மலையக மக்களின் மண்ணுரிமை குறியீடு இவரின் மரணத்தின் பின்னர் தான் நில உரிமையை மலையக மக்கள் அனுபவிக்க கூடிய சூழ்நிலை உருவானது. என்றார்.

# இலவச மருத்துவ முகாம்

தலவாக்கலை குறூப் நிருபர்

வொயிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் நுவரெலியா பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடாத்திய மாற்றுதிறனாளிகள் மற்றும் இளைஞர்களுக்கான இலவச மருத்துவ முகாமொன்று நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.



மருத்துவ முகாமில் 122 விசேட தேவையுடைய சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வொயிஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி வசந்த புஸ்பகுமார, வொயிஸ் நிறுவனத்தின் நுவரெலியா மாவட்ட பொறுப்பதிகாரி தர்மேந்திரராஜா,நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் பிரதீப விஜயசூரிய, அரசசார்பற்ற நிறுவன இணைப்பாளர் நிலங்க மஞ்சுசிறி, சமூக உத்தியோகத்தர் வி.ஏ.பிரியந்தயடி சில்வா, ஆர். டி.குமாரதாஸ, மல்லிகா மற்றும் நுவரெலியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

# மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய இணைப்பாளர் அமெரிக்கா பயணம்

தலவாக்கலை குறூப் நிருபர்



தலவாக்கலை கிறேட் வெஸ்டன் கல்கந்தவத்தையை பிறப்பிடமாக கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண மற்றும் வவுனியா பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் *Human and Civil Rights for Marginalized Populations for the Indo Pacific* எனும் தலைப்பிலான செயலமர்வில் கலந்துக் கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்கா பயணமானார். நேற்று 03 ஆம் திகதி முதல் இம்மாதம் 27 ஆம் திகதி வரை செயலமர்வு ஐக்கிய அமெரிக்காவின் வாஷிங்டன், நியுயோர்க், புளோரிடா மற்றும் கலிபோர்னியா ஆகிய மாகாணங்களில் இடம்பெறவுள்ளது. இச் செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண மற்றும் வவுனியா பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் கலந்துக்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## போதை மாத்திரைகளுடன் பொலிஸ் உத்தியோகத்தர் கைது

*றொட்டவெவ குறூப் நிருபர்*

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தானியகம பிறீமா விடுதிக்கு அருகில் போதை மாத்திரைகளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை விசேட பொலிஸ் அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (02) 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் திருகோணமலை பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றி வரும் 69842 சீனக்குடா ஐந்தாம் கட்டை கெமுனுபுர பகுதியைச் சேர்ந்த அனுருத்த (25 வயது) எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பில் திருகோணமலை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸ் உத்தியோகத்தரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 450 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை விசேட பொலிஸ் அதிரடி படையினர் சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் சீனக்குடா பொலிசார் தெரிவித்தனர்.



கல்முனை கடற்கரை கண்ணகி அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நேற்று (3) வெள்ளிக்கிழமை கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் நடைபெற்ற போது...
(படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்)

## கல்முனையில் ஜீ.சி.ஈ உயர்தர வகுப்புகளை 18ஆம் திகதிக்கு பின்னரே ஆரம்பிக்க தீர்மானம்

*கல்முனை விசேட நிருபர்*

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர டியூசன் வகுப்புகள், கல்முனையிலுள்ள தனியார் கல்வி நிலையங்களில் இம்மாதம் 18 ஆம் திகதிக்கு பின்னரே ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப், தனியார் கல்வி நிலையங்களின் நடத்துனர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. இக்கலந்துரையாடல் வியாழக்கிழமை (02) மாலை, மாநகர முதல்வர் செயலகத்தில் இடம்பெற்றது.



கல்விப் பொதுத் தராதர உயர்தர பிரிவுகளில் கல்வி கற்கவுள்ள புதிய மாணவர்களுக்கான வகுப்புகள் நாளை சனிக்கிழமை (04) ஆரம்பமாகும் என டியூட்டரிகளினால் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுற்ற கையோடு இவ்வகுப்புகள் நடத்தப்படுவதற்கு பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் தரப்பில் இருந்து அதிருப்தி வெளியிடப்பட்டதன் பேரில், மாணவர்களின் ஓய்வைக் கருத்தில் கொண்டு, டியூட்டரி நடத்துனர்கள் முதல்வரினால் அவசரமாக அழைக்கப்பட்டு, அவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலையடுத்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் மாணவர்களின் நலன் கருதி மாநகர சபையினால் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டுமெனவும் இதன்போது முதல்வரினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக டியூட்டரிகளின் சுற்றுச்சூழல் சுத்தம், காற்றோட்ட வசதிகள், மாணவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு போன்றவை உறுதிப்படுத்தப்படுவதுடன் மலசலகூட வசதிகளும் கட்டாயம் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் கட்டணங்கள் நியாயமான முறையில் அறவிடப்பட வேண்டும் எனவும் முதல்வரினால் அறிவுறுத்தப்பட்டது.



மட்டக்களப்பு பார்வீதி எல்லை வீதிச் சந்தி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக தினத்தையொட்டியும் வெள்ளிக்கிழமை சதுர்த்தியை முன்னிட்டும் பாற்குடப் பவனி மட்டக்களப்பு நகரில் நேற்று (03) நடைபெற்றது.
(படம்: மட்டக்களப்பு விசேட நிருபர்)

திருகோணமலையில்

## வறிய குடும்பத்துக்கான வீடு; அடிக்கல் நாட்டல்



*தம்பலகாமம் குறூப் நிருபர்*

சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் நிர்மாணிக்கப்படவுள்ள நான்காவது வீட்டிற்கான அடிக்கல் திருகோணமலை உதயபுரி பிரதேசத்தில் நேற்று நாட்டி வைக்கப்பட்டது. இந்நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சரவணபவானந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதன், திருகோணமலை நகராட்சி மன்ற நூலகத்தின் பிரதம நூலகர் கனகசுந்தரம் வரதகுமார், அன்பு சன சமூக நிலையத்தின் செயலாளர் இராமநாதன் இராகுலன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டு வீட்டிற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

மட்டு. மாவட்ட

## மின் தகனசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

*கல்லடி குறூப் நிருபர்*



மட்டக்களப்பு மாவட்டத்தின் நீண்டகால தேவையாக இருந்து வந்த மின் தகனசாலைக்கான அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டப்பட்டு அதற்கான வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையினாலேயே குறித்த மின் தகனசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வானது புதன்கிழமை காலை 10.30 மணியளவில் கள்ளியங்காடு இந்து மயான வளாகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா.சாணக்கியன் ஆகிய இருவரும் பிரதம அதிதியாக கலந்துகொண்ட நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

செல்வச்சந்நிதியிலிருந்து

## கதிர்காமத்துக்கான பாதயாத்திரை ஆரம்பம்



*காரைதீவு குறூப் நிருபர்*

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய இலங்கையின் மிகநீண்ட கதிர்காமப் பாதயாத்திரை இன்று 4ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகின்றது.

வடக்கு – கிழக்கு – ஊவா ஆகிய 03 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை ஆகிய ஏழு மாவட்டங்களை இணைக்கும் 52 நாட்கள் 572 கி.மீற்றர் தூரம் கொண்ட இலங்கையின் மிக நீண்ட கதிர்காமப் பாதயாத்திரையானது இன்று யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகனாலயத்திலிருந்து விசேட பூஜை புனஸ்காரங்களுடன் ஆரம்பமாகவிருக்கின்றது.

## அக்கரைப்பற்று சதொசவில் சீனி மூடைகள் இறக்கப்பட்டு சில மணிநேரங்களில் முடிவடைந்ததால் மக்கள் குழப்பம்

*வாச்சிக்குடா விஷேட நிருபர்*

அக்கரைப்பற்று அரச சதொச விற்பனை நிலையத்தில் நேற்று சீனி மூடைகள் இறக்கப்பட்டு ஒரு சில மணித்தியாலங்களில் முடிவடைந்துவிட்டதாக தெரிவித்ததை அடுத்து பொதுமக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டதுடன் ஆத்திரமடைந்த நிலையில் காணப்பட்டனர்.

நேற்றுக் காலை முதல் சீனி மூடைகள் இறக்கப்படுவதாக மக்களுக்கு கிடைத்த தகவலை அடுத்து அங்கு கூடிய மக்கள் நீண்ட வரிசையில் சீனியை பெற காத்திருந்தனர்.

இந்நிலையில் நண்பகல் அளவில் லொறி மூலம் சீனி மூடைகள் இறக்கப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர். ஆனாலும் சில மணித்தியாலங்களில் சீனி முடிவடைந்து விட்டதாகவும் மேலும் 60 பேருக்கு மாத்திரம் சீனி வழங்கப்படும் என சதொசவின் காவலாளி ஒரு சில மணிகளில் தெரிவித்துள்ளார்.



ஒருவருக்கு ஒரு கிலோ எனும் அடிப்படையில் பார்த்தாலும் 2 மூடைகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கும் எனவும் மக்கள் கூறினர். ஒரு சதொச நிலையத்திற்கு இரு மூடைகளா அரசு அனுப்புகின்றது எனவும் கேள்வி எழுப்பினர்.

இந்நிலையில் சிலருக்கு அளவுக்கதிமாக சீனி விநியோகம் இடம்பெறுவதாகவும் மக்கள் குற்றம் சுமத்தினர். இவ்வாறிருக்கையில் ஒருவர் அளவுக்கதிகமாக சீனி கொள்வனவு செய்துள்ளதாகவும் அடையாளப்படுத்தினர். அவர் சதொச நிலையத்தில் இருந்து வெளிவருகையில் அவரது பையை பார்வையிட மக்கள் எத்தணித்த நிலையில் குறித்த நபர் எதிர்ப்பு தெரிவித்ததுடன் தம்வசம் வைத்திருந்த பையினை எடுத்துச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

சதொச நிலையம் தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் முறைப்பாடுகளையும் மக்கள் தெரிவித்து வருகின்ற நிலையில் இது தொடர்பில் மக்கள் முறையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் ராஜனுக்கு பிடிவிறாந்து

*காரைதீவு குறூப் நிருபர்*

கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் ஆஜராகாத காரணத்தினால் கல்முனை நீதவான் நீதிமன்ற நீதவான் சம்சுதீன் இந்த பிடிவிறாந்தை பிறப்பித்திருக்கிறார்.

கல்முனை இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற காணியொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பான வழக்கு கடந்த 1ஆம் திகதி புதன்கிழமை கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது .



இஸ்லாமாபாத்தில் இருக்கின்ற தமது காணியில் கட்டுமானப் பணிகளை செய்வதற்கு சென்றவேளை காணிக்குள் அத்துமீறி நுழைந்து தன்னையும் தனது வேலையாட்களையும் விடாது தொந்தரவு இடையூறு செய்து அச்சுறுத்தல் விடுத்தமையை எதிர்த்து கல்முனையைச் சேர்ந்த அப்துல் ஹமீட் ஜவாஹிர் என்பவர் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார்.

அந்த வழக்கு 1 ஆம் திகதி புதன்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிராளிகள் ஆக மாநகரசபை சந்திரசேகரன் ராஜனும் கல்முனை மெதடிஸ்த குரு கிருபைராஜா பாஸ்டரும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

வழக்கு நடந்த அன்று கிருபைராஜா பாஸ்டர் சமுகமளித்திருந்தார். அவரை ஒரு இலட்ச ரூபா சரீர பிணையுடன் நீதவான் விடுவித்தார். உறுப்பினர் ராஜன் சமுகமளிக்காத காரணத்தால் அவருக்கு நீதவான் பிடிவிறாந்து பிறப்பித்தார். எதிராளிகள் சார்பிலே சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிவரஞ்சித் ஆஜராகி வாதிட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆரையம்பதியில் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்ள நீண்ட வரிசை

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

காத்தான்குடி தெற்கு எல்லையிலுள்ள ஆரையம்பதி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதற்காக வெள்ளிக்கிழமை (03) அதிகாலை முதல் நீண்ட வரிசையில் பொது மக்கள் காத்திருந்தனர்.

இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக்கவுள்ளதாக அறிந்த பொது மக்கள், வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணிக்கே மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்திருந்தனர்.



# ரி-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

15ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு 'ஜொலிகிங்ஸ்' விளையாட்டுக்கழகம் நடாத்திய 'மோகன் கனேஸ்' ரி 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி 2022 காரைதீவு கனகரெட்ணம் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காரைதீவு விளையாட்டு கழகம் மோதியிருந்தது .

இப்போட்டியில் காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக்கழகம் வெற்றி வாகை சூடி சம்பியனானது. இரண்டாமிடத்தை காரைதீவு விளையாட்டு கழகத்தினர் பெற்றனர்.

இந்நிகழ்வுக்கு பல்வேறு அதிதிகள் கலந்துகொண்டனர். இச்சுற்றுப்போட்டிக்கு அமரர் மோகன் கனேஸ் குடும்பத்தினர் அனுசரணை வழங்கி இருந்தனர்.

## இந்திய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில்

# 12 இலங்கையர்கள் பங்கேற்பு



இந்தியாவின் சென்னையில் எதிர்வரும் 10 முதல் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 61ஆவது இந்திய மாநில மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் இலங்கையைச் சேர்ந்த 12 பேர் கொண்ட அணியொன்று பங்கேற்கவுள்ளது.

இ ப் போ ட் டி த் தொடரில் இலங்கை சார்பில் இரண்டு அஞ்சலோட்ட அணிகளையும், தனிநபர் போட்டி நிகழ்ச்சிகளுக்காக 2 வீரர்களையும் பங்குபற்றச் செய்ய இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்ட அணியும், பெண்களுக்கான 4×100 மீற்றர் அஞ்சலோட்ட அணியும் களமிறங்கவுள்ளதுடன், ஆண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் ரொஷான் தம்மிக்க மற்றும் ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் சமல் குமாரசிறி ஆகியோர் தனிநபர் நிகழ்ச்சிகளிலும் போட்டியிடவுள்ளனர்.

ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்ட அணியில் அருண தர்ஷன, இசுரு லக்ஷான், பாபசர நிகு, தினுக தேஷான் மற்றும் ஆர். எம் ராஜகருணா ஆகியயோர் இடம்பெற்றுள்ள அதேவேளை, பெண்களுக்கான 4×100 மீற்றர் அஞ்சலோட்ட அணியில் அமாஷா டி சில்வா, ருமேஷிகா ரத்நாயக்க, ஷெலிண்டா ஜென்சன், மேதானி ஜயமான்ன மற்றும் லக்ஷிகா சுகந்தி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை அணி இம் மாதம் 9ஆம் திகதி இந்தியாவுக்குப் புறப்படவுள்ளதுடன், இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

# மறைந்த ஷேன் வோர்னேவுக்கு லோர்ட்ஸ் மைதானத்தில் இரசிகர்கள் மத்தியில் மரியாதை செலுத்திய வீரர்கள்



இங்கிலாந்திற்கு மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக நியூசிலாந்து அணி சென்றிருக்கிறது.

சஸக்ஸ் கவுன்டி அணியுடனான முதல் பயிற்சி ஆட்டம் டிராவாக, இரண்டாவது பயிற்சி ஆட்டத்தில் கவுன்டி செலக்ட் லெலன் அணியுடன் தோற்றிருந்தது நியூசிலாந்து.

இரண்டு பயிற்சி ஆட்டங்களும் முடிவடைந்திருக்க, நேற்றுமுந்தினம் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் முதல் டெஸ்டில் இங்கிலாந்து நியூசிலாந்து அணிகள் மோதி வருகின்றன.

இங்கிலாந்து அணிக்கு நியூசிலாந்தைப் பூர்வீகமாகக் கொண்ட பென் ஸ்டோக்ஸ் தலைவராகவும், நியூசிலாந்தைச் சேர்ந்த பிரன்டன் மெக்கல்லம் பயிற்சியாளராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

முதலில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து தலைவர் கேன் வில்லியம்சன் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

ஆனால் அந்த முடிவு தவறானது என்று இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் நியூசிலாந்து து டு ப் பா ட் ட வீ ர ர் க ளு க் கு உணர்த்தினார்கள்.

டாம் லாதம் [1], வில் யங் [1] இருவரையும் அண்டர்சன் அனுப்பி வைத்தார். டெவோன் கான்வோவை [3] பிராட் வெளியேற்றினார்.

கேன் வில்லியம்சன் [2], டேர்ல் மிட்ச்செல் [13], டாம் பிளன்ட்டல் [14] ஆகியோரை அறிமுக வீரர் போட்ஸ் பெவிலியன் அனுப்பி அசத்தினார்.

முதல் இன்னிங்ஸில் 24 ஓவர்களில் 39 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுகளை நியூசிலாந்து இழந்திருக்க, மதிய உணவு இடைவேளை விடப்பட்டத.

முதல் பருவத்தில் முடிவுக்கு ஒரு ஓவருக்கு முன்னால் 23வது ஓவரில், மார்ச் 4 ஆம் திகதி தாய்லாந்தில் மாராடைப்பால் மரணமடைந்த லெஜன்ட் லெக்ஸ்பின்னர் ஷேன் வார்னேவுக்கு 23 நொடிகள் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அவர் ஜெர்சி எண் 23 என்பதால் இந்த முறையில் இரு அணி வீரர்களும் அஞ்சலி செலுத்தினர்.

ஆஸஷ் தொடரில் இங்கிலாந்து அணியோடு 36 டெஸ்டுகளில் 195 விக்கெட்டுகளை கைப்பற்றி, ஆஷஷில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வீரராக ஷேன் வோர்ன்தான் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது!

# இலங்கை வலைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக விக்டோரியா லக்ஷ்மி

**திருகோணமலை குறூப் நிருபர்**



இலங்கை வலைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய தலைவராக விக்டோரியா லக்ஷ்மி தெரிவாகியுள்ளார்.

இலங்கை வலைபந்தாட்ட சங்கத்துக்காக எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு (20-2224) புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் விளையாட்டுத்துறை அமைச்சின் டன்கன் வைட் கேட்போர் கூடத்தில் (31) நடைபெற்றது.

32 அங்கத்துவ சங்கங்களின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இத்தேர்தலில் தேசிய சேவைகள் வலைபந்தாட்ட சங்கம் சார்பாக தலைவர் பதவிக்கு போட்டியிட்ட விக்டோரியா லக்ஷ்மி 21 வாக்குகளை பெற்றுக்கொள்ள, அவரை எதிர்த்து மேல் மாகாண வலைபந்தாட்ட சங்கம் சார்பாக போட்டியிட்ட க்லெரில் டோசருக்கு 11 வாக்குகளும் கிடைத்தன.

வலைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், ஆசிய வலைபந்தாட்ட சங்கத்தின் உதவித் தலைவருமான லக்ஷ்மி விக்டோரியா 10 மேலதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று மீண்டும் இலங்கை வலைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக தெரிவாகினார்.

இதற்கு முன் இரண்டு தடவைகள் இவர் இலங்கை வலைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் தொடர் திகனையில் ஆரம்பம்

செயலாளர் பதவிக்கு மூவர் போட்டியிடுவதாக இருந்தது. எனினும் இரத்தினபுரி மாவட்ட வலைபந்தாட்ட சங்க பிரிதிநிதி ஷிரோமி குருப்பு வாபஸ் பெற்றதால் இருவருக்கு இடையில் போட்டி இடம்பெற்றது.

இரத்தினபுரி மாவட்ட வலைபந்தாட்ட சங்கத்தின் பி. ரி . சுமித்ராவை 20 – 12 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிகொண்ட கேகாலை மாவட்ட வலைபந்தாட்ட சங்க பிரதிநிதி விந்தனா தயாரட்ன புதிய செயலாளராகத் தெரிவானார்.

உதவி செயலாளர் பதவிக்கு வவுனியா மாவட்ட வலைபந்தாட்ட சங்கம் சார்பாக நிதர்சனா குலேந்திரன் போட்டியின்றி தெரிவானார். இவர் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆசிரியை ஆவார்.

இப் பதவிக்கு போட்டியிடவிருந்த களுத்துறை மாவட்ட வலைபந்தாட்ட சங்கத்தின் பத்மா குணவர்தன கடைசி நேரத்தில் வாபஸ் பெறுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தார். இதனை அடுத்தே நிதர்சனா உதவி செயலாளராக போட்டியின்றி தெரிவானார்.

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தற்போதைய நிர்வாக சபையானது ஐந்து பதவிகளைக் கொண்டதாக. மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு வலைப் பந்தாட்ட சங்க பிரிதிநிதி பத்மினி ஹொரணகே பொருளாளராக தெரிவாக, தேசிய சேவைகள் வலைபந்தாட்ட சங்க பிரதிநிதி லயானி ரேணுகா உப பொருளாளராக தெரிவு செய்யப்பட்டார்.

உதவித் தலைவராக நிரோதா அபேவிக்ரம (இலங்கை பாடசாலைகள் வலைபந்தாட்ட சங்கத் தலைவர்), உதவி பொருளாளராக லயனி ரேனுகா குருப்பு ஆகியோர் தெரிவாகினர்.

தேர்தலில் தலைவர் பதவிக்க மூன்று வேட்புமனுக்கள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சங்கங்களை தகுதி நீக்கம் செய்ய தேர்தல்கள் குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தின் புதிய அதிகாரிகள்:

தலைவர் – விக்டோரியா லக்ஷ்மி

செயலாளர் – விந்தனா தயாரட்ன

பொருளாளர் – பத்மினி ஹொரணகே

உதவி செயலாளர் – நிதர்சனா குலேந்திரன்

உதவி பொருளாளர் – லயானி ரேணுகா

# சம்பியன்ஸ் லீக் 2022 நேற்று முதல் ஆரம்பம்



இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் சம்பியன்ஸ் லீக் தொடர் நேற்றுமுதல் வெள்ளிக்கிழமை (03) ஆரம்பமானது என இலங்கை கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சுபர் லீக் தொடரை அடுத்து இலங்கையின் மிகப் பெரிய தொடராக உள்ள சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் கடந்த மூன்று வருடங்களாக இலங்கையில் இடம்பெறவில்லை. இந்நிலையில் 3 வருட இடைவெளியின் பின்னர் இந்த தொடர் நேற்று ஆரம்பமானது.

புதிய அணிகளின் உள்வாங்களுடன் இடம்பெறும் இம்முறை தொடர் கடந்த மே மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகவிருந்தது. எனினும், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டிகள் பிற்போடப்பட்டன.

இந்நிலையில் நேற்று முதல் இடம்பெறும் இந்த தொடரின் முதல் வாரத்திற்கான போட்டி அட்டவணையும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, முதல் வாரப் போட்டிகள் கொழும்பு பெத்தகான அரங்கு, குருனாகலை மாலிகாபிடிய அரங்கு, மற்றும் மாத்தறை கொடவில விளையாட்டரங்கு ஆகிய மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

அதன் பின்னர் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஒரு போட்டியில் ஜாவா லேன் அணியும் இலங்கை பொலிஸ் அணியும் சுகததாஸ அரங்கில் மோதும். அதேவேளை, அதே தினத்தில் பெலிகன்ஸ் மற்றும் சுபர் சன் அணிகளுக்கு இடையிலான போட்டி மாலிகாபிடியில் இடம்பெறும்.

ஞாயிற்றுக்கிழமை மாலிகாபிடியவில் இடம்பெறும் போட்டியில் மாவனல்லை செரண்டிப் அணியும் யாழ்ப்பாணம் சென் மேரிஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தும் அதேவேளை, குறித்த தினத்தில் சொலிட் மற்றும் சோண்டர்ஸ் அணிகள் சுகததாஸ அரங்கில் மோதும்.

லீக் முறையில் இடம்பெறும் இந்த தொடரில் பங்கு கொள்ளும் அனைத்து அணிகளும் ஏனைய அணிகளுடன் தலா ஒரு முறை மோதும்.

எனவே, 14 அணிகளுக்கும் தலா 13 போட்டிகள் உள்ளன. தொடரின் முதல் வாரத்திற்கான போட்டி அட்டவணை மாத்திரமே தற்போது வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 84 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

# பேராற்றுவெளியன் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் 2008 ஆம் ஆண்டு அணி சம்பியானாக தெரிவு

**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**



திருகோணமலை கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தி/பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 84 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலையின் பழைய மணவர்களுக்கிடையிலான 'பேராற்றுவெலியன் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள்' கல்லூரியின் அதிபர் எச்.எம். நௌஸாட் தலைமையில் பேராற்றுவெளி விளையாட்டு மைதானத்தில் விமர்சையாக நடைபெற்றது.

இச்சுற்றுப்போட்டிகள் பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தி,மற்றும் பாடசாலைக்கான மைதான கொள்வனவு,கல்வி கற்ற பழைய மாணவர்களின் ஒருங்கினைப்பு போன்ற விசேட எண்ணக்கருவின் கீழ் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் கடந்த 1989 ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான வகுப்புக்கள் பங்குபற்றியிருந்தன.

இறுதிச் சுற்றுப் போட்டிக்கு 2005 ஆம் ஆண்டும்,2008 ஆம் ஆண்டு தெரிவாகி ஒற்றையொன்று மோதியது இறுதியில் 2008 ஆம் ஆண்டு அணி 'பேராற்றுவெலியன் வெற்றிக்கிண்ணத்தினை' பெற்றுக் கொண்டார்கள்.

இறுதிப் போட்டிக்கு கந்தளாய் வலயக்கல்விப் பணிப்பாளர்,உதவிப் பணிப்பாளர்,வலயக்கல்வி அதிகாரிகள்,பாடசாலை அதிபர்கள் ,பெற்றோர்கள் உட்பட பெருந்திரலான பழைய மாணவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 4ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.